பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

பக்கங்கள் எட்டு
விலை ரூபா 5-00

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 புரட்டாதி 29 திங்கட்கிழமை (15-10-2001) தொலைபேசி: 3378 ஒலி 308

அதி நவீன மோஸ்தர்களில்
தரம் குன்றா
தங்க நகைகளுக்கு
அர்ச்சனா
ஜுவலர்ஸ்
118, கஸ்தூரியார் வீதி
176/1, நாவலர் வீதி
யாழ்ப்பாணம்.

## போட்டியிடும் சின்னத்தில் போட்டி

# யாழ்ப்பாணத்தில் கூட்டுச்சேர்வதில் கூட்டணி-காங்கிரஸ் இணக்கமில்லை

## முடிவின்றி நேற்றைய கூட்டம் முடிந்தது

(நமது நிருபர்)

எதிர்வரும் பொதுத்தேர்தலில் வடக்கு கிழக்கு மாகாணத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி, ரெலோ, அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் ஆகிய மூன்று தமிழ்க்கட்சிகளும் இணைந்து உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடுவதில் அகில இலங்கைத் தமிழக் காங்கிரஸ் இணக்கம் தெரிவிக்காத நிலையில் நேற்றைய பேச்சுவார்த்தை முடிவடைந்துள்ளது.

திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, வவுனியா ஆகிய மாவட்டங்களில் இணைந்து போட்டியிட்டாலும் யாழ்ப்பாணத்தில் அகில இலங்கை தமிழ்க்காங்கிரஸ் தனது சைக்கிள் சின்னத்தில், அல்லது பொதுச்சின்னத்தில் போட்டியிடுவதற்கு விருப்பம் தெரிவித்த போதும் அதனை ஏற்காத நிலையில் கூட்டுச்சேர்வதில் இணக்கம் காணாது முற்றுப்பெற்றன.

டிசம்பர் மாதம் 5ம் திகதி நடைபெற விருக்கும்பொதுத் தேர்தலில் தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து போட்டியிடுவதற்கு எடுத்த முயற்சிகள் நேற்றைய பேச்சுவார்த்தை வரை இணக்கம் காணப்படாதநிலையில் உள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணிச் சின்னத்தில் ரெலோ போட்டியிடச் சம்மதம் தெரிவித்த போதும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் திருமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் தமிழர் பிரதிநிதித்துவம் காப்பாற்றப்படும் வகையில் கூட்டணிச் சின்னத்தில் போட்டியிடவும், வவுனியாவில் ரெலோவின் சின்னத்தில் போட்டியிடவும் விருப்பம் தெரிவித்திருந்த அதேவேளை யாழ்ப்பாணத்தில் உதயசூரியன் சின்னம் தவிர்ந்த பொதுச் சின்னம் ஒன்றில் போட்டியிட விருப்பம் தெரிவித்தது.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின்இவ்விருப்பத்தை கூட்டணி ஏற்றுக் கொள்ளாத நிலையில் காங்கிரஸ் தனது தனித்துவத்தை இழக்

## ஐ. தே. க. ஆட்சி அமைத்தால்

## சரத் முனசிங்காவே பிரதி பாதுகாப்புஅமைச்சர்

பொதுத்தேர்தலில் வெற்றி பெற்று 2002ம் ஆண்டு ஜனவரிமாதம் ஐக்கியதேசியக் கட்சி ஆட்சி அமைக்குமாயின் அதன் பிரதிப் பாதுகாப்பு அமைச்சராக முன்னாள் இராணுவப்பேச்சாளர் பிரதி சபாநாயகருமான பிரிகேடியர்சரத் முனசிங்க நியமிக்கப்

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசில் கிடைக்காத பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் பதவியில் குறிவைத்தே அவர் ஐக்கிய தேசியக்கட்சியில் இணைந்து கொண்டதாகவும் பிரதி பாதுகாப்பு அமைச்சர் பதவிவழங்குவதாக ஐக்கிய தேசியக்கட்சி அவருக்கு வாக்

தனியார், கூட்டுறவு ஊழியர்களுக்கும்

## இடைக்கால கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும்

## ஜனாதிபதி கோரிக்கை

(கொழும்பு)

இம்மாதம் முதல் அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள இடைக்கால சம்பள உயர்வு 1200ரூபா வினையும் தனியார் துறையினருக்கும், கூட்டுறவுத் துறையினருக்கும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்டவர்களை ஜனாதிபதிசந்திரிகா கேட்டுள்ளார்.

சம்பள உயர்வு வழங்கப்படுதல் தொடர்பாக அவர் விடுத்துள்ள வேண்டுகோளில் மேலும் தெரிவித்திருப்பதாவது;

வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ள இவ்வேளையில் சகலருக்கும் சம்பள உயர்வுவழங்கப்பட வேண்டு மென்பதை அரசாங்கம் உணர்ந்த போதும் அரசின் ஸ்திரத்தன்மைஇல்லாமையினால் வழங்க முடியாது போய்விட்டது

இப்போது காபந்து அரசு இருப்பதனால் இதனை எம்மால் செய்யமுடிந்தது 2002ம்

(08ஆம் பக்கம் பார்க்க)

## பொதுத் தேர்தலில் கூட்டணியின் சார்பில் மங்கையற்கரசி போட்டி!

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் முன்னாள் எதிர்க்கட்சித்தலைவர் காலஞ் சென்ற அ. அமிர்தலிங்கத்தின்துணைவியார் திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கம் போட்டியிடவுள்ளதாக நம்பத்தகுந்த வட்டா

தற்போது வெளிநாட்டில் தங்கியுள்ளதிருமதி மங்கையற்கரசி விரைவில் கொழும்பு திரும்புவார் எனவும்.

கொழும்பு திரும்பியதும் யாழ்ப்பாணத்திற்கு வந்து தேர்தல் பிரசாரங்களில் ஈடுபடுவாரெனவும் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

(ந)

பொதுத்தேர்தலில் வெற்றி பெற்று 2002ம் ஆண்டு ஜனவரிமாதம் ஐக்கியதேசியக் கட்சி ஆட்சி அமைக்குமாயின் அதன் பிரதிப் பாதுகாப்பு அமைச்சராக முன்னாள் இராணுவப்பேச்சாளர் பிரதி சபாநாயகருமான பிரிகேடியர்சரத் முனசிங்க நியமிக்கப் படுவார் எனத் தெரிவிக்கப் படுகிறது.

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசில் கிடைக்காத பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் பதவியில் குறிவைத்தே அவர் ஐக்கிய தேசியக்கட்சியில் இணைந்து கொண்டதாகவும் பிரதி பாதுகாப்பு அமைச்சர் பதவிவழங்குவதாக ஐக்கிய தேசியக்கட்சி அவருக்கு வாக்குறுதி அளித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ)

...யாழ்ப்பாணத்தில் உதயசூரியன் சின்னம் தவிர்ந்த பொதுச் சின்னம் ஒன்றில் போட்டியிட விருப்பம் தெரிவித்தது, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் இவ்விருப்பத்தை கூட்டணி ஏற்றுக் கொள்ளாத நிலையில் காங்கிரஸ் தனது தனித்துவத்தை இழக்கத்தயார் இல்லை என்றும்

(08ஆம் பக்கம் பார்க்க)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் முன்னாள் எதிர்க்கட்சித்தலைவர் காலஞ் சென்ற அ. அமிர்தலிங்கத்தின்துணைவியார் திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கம் போட்டியிடவுள்ளதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

...தங்கியுள்ளதிருமதி மங்கையற்கரசி விரைவில் கொழும்பு திரும்புவார் எனவும்.

கொழும்பு திரும்பியதும் யாழ்ப்பாணத்திற்கு வந்து தேர்தல் பிரசாரங்களில் ஈடுபடுவாரெனவும் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

[ந]

# ஐ.தே.க. ஆட்சி அமைத்தால் வன்னிசென்று புலிகளின் தலைவர் பிரபாவுடன் பேசுவோம்

## முன்னாள் அமைச்சர் எஸ். பி. திஸாநாயக்கா தெரிவிப்பு

எதிர்வரும் பொதுத்தேர்தலில் ஐக்கியதேசியக்கட்சி வெற்றிபெற்று ஆட்சிக்குவந்தால் வன்னிக்குச்சென்று தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர்வேலுப்பிள்ளை பிரபாகரனுடன் பேச்சுநடத்துவோம்.

இவ்வாறு ஸ்ரீலங்காசுதந்திரக் கட்சியின் செயலாளராக இருந்து பதவிநீக்கப்பட்டு ஐக்கியதேசியக்கட்சியில் இணைந்து கொண்ட முன்னாள்அமைச்சர் எஸ்.பி திஸநாயக்கா தெரிவித்துள்ளார்.

ஐக்கியதேசியக் கட்சிக்கும்,விடுதலைப் புலிகளுக்குமிடையே தொடர்புண்டு என(8ம் பக்கம் பார்க்க)

## புலிகள் தரப்பில் உயிரிழந்தோர்

(வவுனியா)

முல்லைக் கடற்பரப்பில் கடந்தவெள்ளியன்று ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த கடற்படையினருடன் ஏற்பட்ட மோதலில்

தமிழொளி (அரவிந்தசாமி சுபாசினி யாழ்மாவட்டம்) என்ற போராளியும்,

மணலாறு பகுதியில் படையினருடன் ஏற்பட்ட எதிர்பாராத மோதலில் கலையரசன் நவரட்ணம் திருக்

(08ஆம் பக்கம் பார்க்க)

## ஸ்ரீ. மு. காங்கிரஸில் சேர பேரியலுக்கு அழைப்பு!

(கொழும்பு)

அமைச்சர் பேரியல் அஷ்ரப் முஸ்லிம் காங்கிரஸ்ஸில் இணைந்து எந்தமாவட்டத்தில் போட்டியிட விரும்பினாலும் அந்த மாவட்டத்தில் இடம்கொடுக்க முஸ்லிம்காங்கிரஸ் தயாராக இருக்கிறது என முஸ்லிம் காங்கிரஸ்தலைவர் ரவூப் ஹக்கீம் பகிரங்கமாக அறிவித்துள்ளார்.

இதேவேளை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசும் முஜிபுர் ரகுமானைச் செயலாளராகக் கொண்ட முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணியும் இணைந்து போட்டியிட பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப் படுகிறது. (ந)

## புளொட் தனித்துப்போட்டி

(கொழும்பு)

எதிர் வரும் பொதுத் தேர்தலில் புளொட் அமைப்பு வடக்குக் கிழக்கு மாகாணங்களில் தனித்துப் போட்டியிடு மென அந்த அமைப்பின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் அறிவித்துள்ளார். (ந)

## தமிழ்க் கட்சிகளின் கூட்டில் புளொட்டைச் சேர்ப்பது சாத்தியம் இல்லை

(கொழும்பு)

தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பில் புளொட் அமைப்பைச் சேர்த்துக் கொள்வது சாத்தியமில்லை என ரெலோ அமைப்பின் தலைவர்களில் ஒருவரான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

தமிழ்க் கட்சிகளின் கட்டமைப்பில் இணைநதுகொள்ள புளொட் அமைப்புத் தயாராக இருப்பதாக அவ் அமைப்பின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் விடுத்தஅறிவிப்

(08ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறு விளம்பரம்

### தேவை

காரியாலயம் ஒன்றில் பணிபுரிவதற்கு O/L வரை அல்லது அதற்கு மேற்பட படித்த யாழ். மாநகரசபை எல்லைக்குள் வதியும் பெண் பிள்ளை தேவை. சகல விபரங்களுடனும் விண்ணப்பிக்க வேண்டிய முகவரி விளம்பர இல-226, மே/பா 'வலம்புரி' யாழ்ப்பாணம். (3860)


## பயணிகள் சிரமம்

[துன்னாலை]

கொடிகாமம் பருத்தித்துறைக்கு இடையிலான தட்டிவான் போக்குவரத்துச் சேவையில் பெருமளவு பொருட்கள் ஏற்றப்படுவதனால் அதில் பயணிக்கும் மக்கள் இருப்பிட வசதியின்றி உயிராபத்தின் மத்தியில் மிதிபலகையில் பயணம் செய்வதாகத்தெரியவந்துள்ளது.

[உ-41]

## தேர்தலில் தோற்றால் கதிர்காமர் அரசியல் துறவு

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத்தேர்தலில்பொதுஜன ஐக்கியமுன்னணிதோற்று ஆட்சிஅமைக்க முடியாது போனால் அரசியலைத்துறந்து வெளிநாடு செல்லவிருப்பதாக அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் நேற்று முன்தினமிரவு தெரிவித்தார்.

பொதுத்தேர்தலின்முடிவில் எம்.பியாக இருக்கத் தான் விரும்பவில்லை என்றும் அப்படிஏதும் நடந்தால் அரசியலுக்கு முற்றுப்புள்ளிவைத்துவிட்டுவெளிநாடு செல்லப் போவதாக அவர்தெரிவித்துள்ளார். (வ)

# தமிழர்கள் உலகெங்கும் பரந்து வாழ்வதால் இணையத்தில் தமிழ் 2வது மொழியாக உள்ளது

## முத்தமிழ் விழாவில் பேராசிரியர் அ. சண்முகதாஸ் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

"2000 ஆண்டுகளுக்குமேற்பட்ட இலக்கியப் பாரம்பரியம் எமக்கு உண்டு. அத்தகைய சங்க இலக்கியங்களை இணையம் மூலம் இளம் சமுதாயம் அறியச் செய்யவேண்டும். தமிழ். இணையத்தோடு இணைந்து விட்ட நிலையில் மரபு இலக்கிய ஆக்கங்கள் முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டியது காலத்தின் தேவையாகும்.'

யாழ்ப்பாணம்தேசிய கல்வியியற்கல்லூரி முத்தமிழ் விழா கடந்த வெள்ளிக்கிழமை தமிழ் மன்றத் தலைவர் ந. திருவாசகன் தலைமையில் நடைபெற்றபோது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ். பல்கலைக் கழக உயர் பட்டப்படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் அ. சண்முகதாஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்; தமிழ் மொழியின் எதிர்காலத்தை நிச்சயிக்க உதவப் போவது அறிவியல் தமிழ். கணனி யுகத்தில் எமது மொழியும் ஈடுகொடுத்துக் கொண்டிருக்கிறது. உலகில் எங்கும் தமிழர்கள் பரந்து வாழ்வதால் தமிழ். இணையத்தில் இரண்டாவது மொழியாக இருக்கிறது.

தமிழனுக்கு உள்ள சிறப்பான குணம் விருந்தோம்பல். தமிழ் பேசும் கிராம மக்களிடையே இருக்கும் இந்தப் பண்பாட்டை உலகில் எந்த நாட்டிலும் காணமுடியாது.

பைபிள் 500 மொழிகளிலும், திருக்குர்ரான் 250 மொழிகளிலும், மொழிபெயர்க்கப் பட்டிருக்கின்றன. சமயம், சாராத தமிழ் இலக்கியமான திருக்குறள் 100 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது.

சட்டத்திற்குலத்தீனும், ராஜாங்கத்திற்கு பிரெஞ்சும், பக்திக்குதமிழும் சிறப்பு பயன்பாடுடைய மொழியாக விளங்குகின்றன.

தொழில் நுட்ப கருவிக் கையாட்சி மொழியாக ஆங்கிலமே இருக்கிறது. அது தமிழுக்கு மாறும் போது அறிவியல் தமிழ் மெருகு பெறும் என்றார்.

சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட நல்லூர் பிரதேச சபைத் தலைவர் க. மணி பல்லவராஜன் உரையாற்றுகையில்;

தமிழர் என்று சொல்லிக் கொண்டு தமிழை முறையாக எழுதப்பேசதெரியாவிட்டால் பயன் இல்லை எமது மொழி, கலை, கலாசாரங்கள் அழிந்து கீழ் நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றன.

இதை முன்னெடுப்பதற்கு இளம் சமுதாயம் பாடுபட வேண்டும்.

நாம் செல்கின்ற பாதைகள் சரியானவையாக இல்லை. எமது தமிழ் இளைஞர் பெரியவர்களுக்கு உரிய மதிப்பு கொடுப்பது அருகி வருகின்றது.

எமது பிரதேசத்தில் இந்நிலை இருக்கும்போது நாட்டின் ஏனைய பிரதேசங்களைப் பற்றிச் சொல்லத் தேவையில்லை.

அன்று பல்கலைக் கழகங்களுக்கு மாணவர்கள் திறமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட வேண்டும் என்று போராடினோம். அன்று கொண்டுவரப்பட்ட விகிதாசாரத் தெரிவுதான் இன்று நடைபெறுகின்ற போராட்டத்திற்கு காரணமாக அமைந்தது.

இன்று நிலைமை மாறி விகிதாசாரத்தை ஏற்கின்ற நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம் என்றார்.

மன்றக் காப்பாளர் திருமதி கௌரி சுரேசன், உபபீடாதிபதி பா. தனபாலன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் மு. பரம்சோதி சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்டார்

(உ-106)

## காயமுற்ற படைவீரர்பலி

(கொழும்பு)

நாகர் கோவில் பகுதியில் விடுதலைப்புலிகளின் மோட்டரார்த் தாக்குதலுக்கு இலக்காகிக்காயமுற்றிருந்த படைவீரர் ஒருவர் பலியாகியுள்ளதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

இதேவேளை கொக்குவில் அரியாலைப் பகுதிகளில் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடிய துப்பாக்கி நபர்கள் இருவரை கடந்த வெள்ளிக்கிழமை படையினர் கைது செய்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளதாகவும் ஊடகத்தகவல் நிலையம் அறிவித்துள்ளது. (ந-4)

## பரந்தனில் எலும்புக் கூடு மீட்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பரந்தன்பகுதியில் மேலும் ஒரு எலும்புக் கூடு கிணறு ஒன்றில் இருந்து மீட்கப் பட்டுள்ளது. நேற்று முன்தினம் மீட்கப்பட்ட இந்த மனித எலும்புக் கூட்டுடன் இதுவரை 69 எலும்புக்கூடுகள் அப்பகுதியில் மீட்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி பெரிய பரந்தன் முதலாம் வாய்க்கால் பகுதியில் உள்ள வீடொன்றின் கிணற்றில்இருந்தேஇந்த எலும்புக் கூடு மீட்கப்பட்டுள்ளது.

1996ம்- 98ம் ஆண்டுகாலப் பகுதியில் கிளிநொச்சியில் 184பொதுமக்கள் காணாமல் போயிருந்தமை குறிப்பிடத்தக்கது. (வ)


# மக்கள் வங்கியின் மகளிர் அதிர்ஷ்டக் கணக்கு

# வனிதா வாசனா - 2001

★ ரூபா 2,670,000 பெறுமதியான மாபெரும் பரிசுக் குவியலை மகளிருக்கென்றே அள்ளித் தருகின்றது.

★ 01-11-2001 - 31-01-2002 வரை ரூபா 7,500 அல்லது அதற்கு மேல் மீதியுள்ள மகளிர் அதிர்ஷ்டக் கணக்குகள் அனைத்தும் பரிசுச் சீட்டிழுப்பில் சேர்த்துக் கொள்ளப்படும்.

ரூபா 7,500/- இற்கும் மேற்பட்ட ஒவ்வொரு 7,500/- இற்கும் சந்தர்ப்பம் கிடைக்கும்.

★ 12 மாதங்களுக்கு மேல் தொடர்ச்சியாக ரூபா 25,000/- அல்லது அதற்கு மேல் மீதியைப் பேணும் மகளிர் அதிர்ஷ்டக் கணக்கு வைத்திருப்போருக்கு ரூபா 300,000/- பெறுமதியான காப்புறுதி வசதி கிடைக்கும்.

★ இக்கணக்கை ஒரு சேமிப்புக் கணக்குப் போன்று நடைமுறைப்படுத்தலாம்.

★ கணக்கிலுள்ள மீதிக்கு வட்டி வழங்கப்படும்.

**விசேட கடன் திட்டம் இதற்கென அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.**

| | |
|---|---|
| 1ம் பரிசு | - ரூபா 750,000- பெறுமதியான மாருதி கார் |
| 24 பரிசில்கள் | - ரூபா 32,000 பெறுமதியான குளிர் சாதனப் பெட்டிகள் |
| 24 பரிசில்கள் | - ரூபா 18,000 பெறுமதியான மைக்கிரோ வேவ்ஒவன்கள் |
| 240 பரிசில்கள் | - ரூபா 7,000 பெறுமதியான தங்க நாணயங்கள் |


பெண்களே! உங்கள் பெயரில் ஏற்கனவே மகளிர் அதிர்ஷ்டக் கணக்கு இருக்குமாயின் அதன் மீதி ஏற்றதாக உள்ளதா எனக் கவனித்து ஏற்ற தொகையை சேமியுங்கள். இல்லாவிடில் அருகிலுள்ள மக்கள்வங்கிக் கிளையில் வனிதா வாசனா கணக்கொன்றை ஆரம்பியுங்கள்.

மக்கள் மனமறிந்த வங்கி

PEOPLE'S BANK

# மக்கள் வங்கி

(C-2713)



பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகத்தினால் வவுனியா நகர மண்டபத்தில் ''வேழம்படுத்த வீராங்கனை'' ஆட்ட நாட்டுக் கூத்து மேடையேற்றப்பட்டது. அந் நிகழ்வில் நெறியாளர் செல்லையா மெற்றாஸ்மயிலுக்கு 'தமிழ் கலைக்காவலன்' பட்டம் வழங்கி மு. வித்தியானந்தாக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் வெளி மாவட்டச் சங்கத்தின் சார்பில் முன்னாள் கல்விப் பணிப்பாளரும் சங்கத்தின் போசகரும் பிரபல எழுத்தாளருமான திரு. வே. சுப்பிரமணியம் (முல்லைமணி) அவர்களால் கௌரவம் அளிக்கப்பட்டது. அருகில் தமிழ்மணி அகளங்கன் காணப்படுகிறார்.

# அன்புக்கோர் ஒளிவிளக்கு
## அன்னலெட்சுமி அம்மையார்

''நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லார்க்கும் பெய்யும் மழை'' என்ற வாக்குக்கு அமைய வாழ்ந்த, வாழுகின்ற அம்மையாரைப் பற்றி நாம் சிந்திக்காமல் இருக்க முடியாது. அன்ன லெட்சுமி அம்மையார் எல்லார்க்கும் நல்லவராக, இனியவராக இருப்பதோடு அமையாது தமது உடல், பொருள், கச்சிறார்கள் மாத்திரம் அல்ல உலக மக்களே வியந்து போற்றுவார்கள்.

''ஒன்றேகுலம் ஒருவனே தேவன்'' என்று திருமூலர் தம் திருமந்திரத்தில் குறிப்பிட்டுள்ளார். இந்தத் திருமந்திரத்தை அம்மையார் செயல் உருவில் சாதி, மத பேதமின்றி வாழ்ந்து காட்டுகிறார். அம்மையாரின் அடிச்சுவட்டை

## இராசமூர்த்தி தியாகராசா

வாழ்வகம்,
மானிப்பாய்.

### இன்று வெள்ளைப் பிரம்பு தினம்

ஆவி அத்தனையையும் விழிப்புலன் வலுவிழந்த சிறார்களுக்காகச் செலவு செய்து வருபவர் என்றால் மிகையாகாது. இன்று ஒக்டோபர் 15 ஆம் திகதி வெள்ளைப் பிரம்புதினம். இத்தினத்திலே அன்னையை நினைவு கூருவோம்.

பால் நினைந்தூட்டும் பாசம்மிகுந்த தாயிலும் பார்க்க அதிசிறந்த தெய்வத்தாயாக இருந்து புறஇருள் நீக்கி அகஒளி ஏற்றும் அருள்மிகு அன்புத் தாயை வாழ்வ உலகமக்கள் அனைவரும் பின்பற்றுவார்களேயானால் உலகத்தில் இக்கட்டான துன்பச் செயல்கள் தாண்டவமாடாது.

மதிப்பிற்குரிய புனிததாயாரின் அயரா முயற்சியினால் வாழ்வகம் வளர்ச்சியுறுவதை நாம காணக்கூடியதாக இருக்கிறது. அன்னை இல்லாத காலம் அவரிற்கு நிகரானவர் யாராவது அவரின் இடத்தை நிரப்புவது கேள்விக்குரியதாக இருக்கின்றது. எனவே அவ்விடத்தை நிரப்பக்கூடியவரை நாம் தேடிப் பிடித்து இத்துறையில் சேவையாற்றும்படி கேட்டுக்கொள்வதோடு அமையாது நாமெல்லாம் வாழ்வகம் வளர்ச்சியுற அன்னையின் அடிச்சுவட்டைப் பின்பற்ற வேண்டும். □

# பாபாவின் வடிவில் அன்பு இருகால் கொண்டு நடமாடுவதையே நாம் காணுகின்றோம்

யாழ்ப்பாணம்
சாயி சமித்திகள்
இன்று 15 ந் திகதி முதல்
ஒருவாரத்திற்கு
**'அன்பு வாரம்'**
அனுஷ்டிக்கின்றன
அதையொட்டி
இக்கட்டுரை
பிரசுரமாகின்றது
(ஆ-ர்)

'அன்புடன் நாளை தொடங்கு; அன்புடன் நாளை நிரப்பு;
அன்புடன் நாளைச்செலவிடு; அன்புடன் நாளை நிறைவு செய்'

**பகவான் ஸ்ரீ சத்தியசாயிபாபா**

அன்பு என்பது என்ன? மனித வழக்கில் அன்பு என்று கருதப்படுவதற்கும், உண்மையான ஆத்மீக அன்புக்கும உள்ள வித்தியாசத்தை முதலில் நாங்கள் விளங்கிக் கொள்ளவேண்டும். ஈர்ப்புக்கு வசப்படுவதைப் பலர் அன்பு என்கின்றார்கள். இந்தப் பற்றுணர்வு எத்தனை அற்பமாக இருந்தாலும், மாறுந் தன்மையதாய் இருந்தாலும் அன்பு என்றே வர்ணிக்கப்படுகின்றது. அன்புக்குச் சரியானஇலக்கணம் இதுவல்ல தெய்வப்பிரீதியே அன்பு எல்லாம் வல்ல பரம் பொருளை அடையும் ஆவல் தான் அன்பு (பிரேமை) என்ற புனித வார்த்தைக்குத் தகுதியுடையது.

### அன்பே தெய்வம்

பகவான் பாபா கூறுகின்றார் 'அன்பே தெய்வம். தெய்வமும் அன்பே. ஆகவே அன்பிலே வாழுங்கள்' அவர் மேலும் கூறுவதாவது; 'அன்பு அல்லது பிரேமைக்கு விரோதம் கிடையாது, சுயநலமில்லை, பிரதிபலன் இல்லை; அன்பு கொடுக்குமேயல்லாது ஒரு போதும்எடுக்காது; அதற்குக் காலம் இல்லை, காரணம் இல்லை; கட்டு திட்டமென்று எதுவுமற்று அனைத்தையும் தழுவும் உலகளாவிய பிரேமையேஉண்மை அன்பாகும்'.

'எண்ணத்தில் சத்தியமாகவும், செயலில் தர்மமாகவும், உணர்வில் சாந்தியாகவும் புரிந்து கொள்ளலில் அஹிம்சையாகவும் உள்ளது அன்பு' என்று கூறுகின்றார் சுவாமி. அவ்வகையில் சத்தியம், தர்மம், சாந்தி, அஹிம்சை, ஆகிய நான்கு அடிப்படை மேம்பாடுகளையும் அன்பின் சுற்றுவட்டத்துக்குள் கொண்டு வருகின்றார். அதனால் 'அனைத்து மேம்பாடுகளிற்கும், ஆடிச்சுடராய் உள்ளோட்டமாய் ஊடே இருப்பது அன்பு' என்கின்றார் சுவாமி.

தெய்வீக அன்பின் வடிவானவர் பாபா. பாபாவின்தெய்வீகத் திரு உருவில் அன்பு இருகால் கொண்டு நடமாடுவதாகக் கருதப்படுகின்றது. சுய நலமில்லாத, அனைத்தையும்தழுவும் அன்பை எல்லா மக்களுக்கும், பொழிகின்றார். அவருக்கு பட்டிக்காட்டவர், ராஜவம்சத்தவர், படித்தவர், பாமரர், பணக்காரர், ஏழை, அமைச்சர், அடிமட்டத்தவர், ஆண், பெண், குழந்தை, இனம், மதம், சாதி, குலம், நிறம், நாடு, மொழி என்ற எந்தப்பாகுபாடும இல்லை.

ஆழமாகிச் சேவையாக உருப்பெறட்டும். சேவை வழிபாடாக உயர் மாற்றமடையட்டும் இதுவே. அனைத்திலும் உயர்ந்த சாதனை.

கரையாத நெஞ்சையும் அன்பு கரைத்து விடும. தன்னலமற்ற, சகஜமான, பூரண அன்பிலலாமல் ஆதமீக சாதனை எதுவும் வெற்றிதராது. அன்பு இல்லாத இடத்தில் பஜனை சுவாசத்தை வீணடிப்பதாகவும், சத்சங்கம் நேரத்தை விரயமாக்குவதாகவும் தியானம் தன்னைத் தானே ஏமாற்றுவதாகவும் முடியும். அன்பில் ஊறிச் செயற்படும் பஜனை சத்சங்கம், தியானம் ஆகியவை அமைதியையும், மகிழ்ச்சியையும், அறிவாற்றலையும் தருகின்றன. அன்பு நிறைந்தவுள்ளவர் எதையும் தியாகம் செய்ய எப்போதும் தயாராயிருப்பார்.

தொகுப்பு
**ம. சிவயோகசுந்தரம்**

### சுயநலம் நீக்கும் அன்பு

பகவான பாபாவின் தெய்வாம்சம் கொடுப்பதும், மன்னித்து மறந்துவிடுவதுமாகும். அன்பு என்பது அதுவே எனக் கொள்வோம. அதற்கு மாறாகக் கூடப்பிறந்த குணமான சுயநலத்தினால் பெற்றுக் கொள்வதும், மறந்து விடுவதும் எமது பழக்கமாக இருக்கின்றது. அன்பு விரிந்து அகல்வது வாழ்க்கை குறுகிச் சுருங்குவது.

இறைவன்பால்உண்மையில் நீங்கள் அன்பு கொள்ளும் போது சுற்றியுள்ளவர்களிடமும் இயல்பாகவே அன்பு பாராட்டத் துவங்குவீர்கள். இறைவனின் மறுவடிவங்கள் அல்லவா அவர்கள்! மேலும் மேலும் அதிகமானோர் உங்கள் அன்புக்கு உரியவராகட்டும். அன்பு மேலும் மேலும்

### அன்புடன் ஆற்றும் கடமை

பகவான் பாபா கூறுகின்றார். 'அன்புடன் கூடிய கடமை விரும்பத்தக்கது அன்பில்லாத கடமைவருத்தத்துக்குரியது. கடமை இல்லாத அன்புதெய்வீகமானது.' அன்புக்கு அச்சம் இல்லை. பிரதிபலன் இல்லை. அது வெற்றிவாகை சூடும், உயர்வு தரும், தூய்மைபபடுத்தும். செய்யும் கருமம் ஒவ்வொன்றையும் அன்போடு இறைவனுக்குக் காணிக்கையாக்கினால் அக்கருமம் புனிதப்படுத்தப்பட்டு வெற்றிகரமாக நிறைவேறும்.

வாழ்க்கையின்பயன் அன்பு. அதனால் சுயநலம் கலவாத அன்பினால் இதயத்தை நிரப்புங்கள். மகா சமுத்திரங்களுக்கும் எல்லை உண்டு. அன்புக்கு எல்லை இல்லை. படித்த பண்டிதனோ, நாடாளும் மன்னனோ படைநடத்தும் வீரனோ யாராலும் அன்பில்லாவிட்டால் பிரயோசனமில்லை. பரம ஏழையானாலும் அன்புள்ளவன் அரசனி



லும் மேலானவன். எல்லா இனிப்பு வகைகளுக்கும் பொதுவாய் சீனி இருக்கின்றது. அதேபோல சமூக, பௌதீக, ஆத்மீக, தார்மீக, தொழில்நுட்பம் சார்ந்த எல்லாவாழ்க்கை நிலைகளுக்கும் அன்பு பொதுவானது.

### பல்கலைக்கழக வேந்தர்

எனது சொந்த அபிப்பிராயத்தைச் சொன்னால்; பாபாவின் அன்பு தனிச்சிறப்புடையது அளவிறந்தது. குறைவுபடாதது. ஈடிணையற்ற பல்கலைக்கழகத்தை உருவாக்கியிருக்கின்றார் சாயிநாதன். ஆரம்ப வகுப்பு முதல் முதுமாணிப் பட்டப்படிப்புவரை மாணவ மாணவியருக்கு இலவசக் கல்வியை அளிக்கின்றார். மாண சமுதாயத்துக்காக அவர் கொண்டுள்ள அன்பை இது காட்டுகின்றது. புனிதமான அப்பல்கலைக் கழகத்தின் வேந்தராகிய அவர் தமது பொன்னான நேரத்தில் 75% வீதத்தை மாணவர்களோடும், மாணவர்களுக்காகவும், மாணவர்கள் சம்பந்தப்பட்ட விடயங்களிலுமே செலவிடுகின்றார். வசதியற்ற மக்கள்மேல் அவ

(6ஆம் பக்கம் பார்க்க)

## பெரும் போகச் செய்கை ஆரம்பம்

(வடமராட்சி ... புத்துறை)

அரியாலை, நாயன்மார்க்கட்டு, செம்மணி ஆகிய இடங்களின் சிற்சில இடங்களில் பெரும் போக நெற்செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது.

யுத்தபயம், மிதிவெடி அபாயம காரணமாக, முன்னைய காலங்களில நெறசெய்கை இடம்பெற்று வநத பெருமளவு வயல் நிலங்கள் தரிசாகக் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

விதைப்பு நடவடிக்கை ஆரம்பமானதைத் தொடர்ந்து கட்டாக்காலிகள் விடயத்திலும் இப் பகுதி விவசாயிகள் விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(உ-223)

## திருட்டு

(யாழ்ப்பாணம்)

கச்சேரி, நல்லூர் வீதியில் உள்ள வீடொன்றில கடந்த வாரம 40 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள் திருட்டுப் போயுள்ளன.

யாழ். செயலக சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் திருமதி க. சிவராசா என்பவரது வீட்டிலேயே ஊரடங்கு வேளை இத் திருட்டுச் சம்பவம் இடமபெற்றுள்ளது.

(உ-104)

## மயான மடம் சேதம்

அராலி வடக்கு வழுக்கையாற்று மயானமடம் முற்றாக இடிந்து வீழ்ந்துள்ளதால், மரணக் கிரியைகளுக்காகச் செல்வோர் தங்குமிடவசதிகள் இன்றிஅவதிப்படுவதாக கூறப்படுகிறது.

(உ-214)

## சுக வாழ்வு

பாதுகாப்பான பாலுறவு முறைகளை ஊக்குவித்தல் எயிட்ஸ் நோய் பரவலைத் தடுக்கும்.

(எயிட்ஸ் வருமுன் காப்போம்)

- தரிசனம்.

# சிறுபான்மையினரின் உணர்வுகளைக் கேவலப்படுத்தும் மக்கள்விடுதலைமுன்னணி

(கொழும்பு)

இலங்கை அரசியல் கட்சிகளில் இடதுசாரி அமைப்பாக தன்னை இனங்காட்டிக்கொள்ளும் மக்கள் விடுதலை முன்னணி சிறுபான்மை மக்களின் உணர்வுகளை கேவலப்படுத்துவது இவர்களின் அரசியல் பாமரத்தனத்தையே சுட்டிக்காட்டுகின்றது என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெ. சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அறிக்கை ஒன்றை அவர் வெளியிட்டுள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; சிறுபான்மை மக்களும் அரசியல் நெருக்கடியில் சிக்கி தவித்துக் கொண்டிருக்கும் பொழுது தம்மை முற்போக்கு சிந்தனையாளர்களாகக்கூறிக் கொள்கின்ற மக்கள்விடுதலை முன்னணியின் சுயரூபத்தை தமிழ்பேசும் மக்கள மட்டுமல்ல இலங்கையிலுள்ள சகல இடதுசாரிக் கட்சிகளும் உணர்ந்துள்ளன;

இனவாத அமைப்புகளின் பட்டியலில் மக்கள் விடுதலை முன்னணியே முதலாவதாக உள்ளதென்பதற்கு அதன் தற்போதைய பக்கச்சார்பான கூற்றுக்களை தவிர வேறு ஆதாரங்கள் தேவையில்லையென அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார். (க-4)

# முல்லைக் கடற் பரப்பில் படையினர் புலிகள் மோதல்

(கொழும்பு)

கடந்த வெள்ளியன்று மு:ப 11,40 மணியளவில்முல்லைத்தீவு கடற்பரப்பில்,ஒப்ரேசன் வருனகிரான' நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தகடற்படையினருக்கும் கடற்புலிகள் அணிக்கும் இடையே மோதல்கள் மூண்டதாகவும்,

இதனையடுத்து உதவிக்கு இலங்கை விமானப்படை அழைக்கப்பட்டதன் பேரில் விடுதலைப்புலிகளின் இரு படகுளில்ஒன்றுசேதமாக்கப்பட்டதுடன், மற்றையது முற்றாக அழிக்கப்பட்டதாகவும் ஊடகத் தகவல் மையம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிக்கப்பட்டுள்ளது. (உ)

# கட்சிக்குள்ளிருந்து எதிராக செயற்பட்டோர் விரைவில் விலக்கப்படுவர்

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணியின் முன்னாள் நாடாளுமன்றஉறுப்பினர்கள்சிலருக்கு எதிர்வரும்பொதுத் தேர்தலின் போது கதிரைச் சின்னத்தில் பேரட்டியிட சந்தர்ப்பம் வழங்கப்பட மாட்டாதென கட்சியின் பொதுச் செயலாளர் டி. எம். ஜெயரத்ன தெரிவித்துள்ளார்;

உள்ளிருந்து கட்சிக்கு குழிபறிக்கமுனைந்தசிலருக்கேஇவ்வாறு சந்தர்ப்பம் மறுக்கப்பட்டுள்ளதாகவும்,இவர்களை கட்சியில் இருந்து விலக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதாகவும் மேலும் தெரிவித்துள்ளார் (உ-7)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

கோப்பாய் பிரதேசததில் அண்மைக் காலத்தில் ஏற்பட்ட திருட்டு அதிகரிப்பைத் தடுக்கும் முகமாகவும், திருடர் குழுவைப் பிடிக்கவும் அதற்கு ஏற்ற வழி முறைகளை மேறகொள்ள உதவிய,

மாண்பு மிகு அமைச்சர்

**கே.என். டக்ளஸ் தேவானந்தா**

அவர்களையும்

வலி கிழக்கு சபைத் தலைவர்

**திரு. பூ. குணசிங்கம்**

அவர்களையும்

உடனிருந்து உதவிய ஈ.பி.டி.பியின் கோப்பாய் பிரதேச அமைப்பாளர்

**திரு .U. L. A. ரவி**

அவர்களையும்

கோப்பாய் பிரதேசகிராம உத்தியோகத்தர்களான

**திரு. ரி. வரதராஜன்,**

**திரு கு.ஜோசப்ரட்ணராஜா, திரு.இ.தயாபரன்**

**திரு. சு. முத்துக்குமாரசாமி**

ஆகியோரையும்

நீர்வேலி, இருபாலை, சிவில் காரியாலயங்கள், கோப்பாய் பொலிஸ் நிலையம் ஆகியவற்றின்

**பொறுப்பதிகாரிகளையும்**

தமது நேரம், வேலைகளை ஒதுககி வைத்து நேரடியாக செயறபட்ட மாரியம்மன் ஐககிய சனசமூக நிலையம், கண்ணகி அம்மன் சனசமூக நிலையம், நாவலடி சனசமூக நிலையம், காளியம்பாள சனசமூக நிலையம, வள்ளியம்மன் சனசமூக நிலையம், யோகபுரம் சனசமூக நிலையம் ஆகியவற்றின்,

**உறுப்பினர்களையும்**

கோப்பாய் பிரதேசத்தில் நடநத திருட்டுக்கள் மற்றும் கசிப்புவிற்பனை போன்ற சமூக விரோத செயல்களைக் கட்டுபபடுத்தியமைக்காக மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**வெள்ளெருவப் பிள்ளையார் சனசமூக நிலைய மக்கள், கோப்பாய்.**

(C-2738)


24 வருடங்களாக

# ஐ. தே. கவும், பொ. ஐ. முன்னணியும் அரசியல் மோசடியே செய்தன

## ஜே. வி. பி. சாடுகிறது

(கொழும்பு)

கடந்த 24 வருடங்களாக ஐ. தே. கட்சியும், பொ. ஐ. முன்னணியும் ஜனநாயக நல்லாட்சியை நடத்தவில்லை. அரசியல் மோசடியே செய்தன.

இவ்வாறு ஜே: வி: பி: பேச்சாளர் விமல் வீரவன்ச கடந்த வெள்ளிக்கிழமை பத்திரிகையாளர் மத்தியில் பேசுகையில் கூறினார்.

தமது கட்சி புதியசகாப்தம் ஒன்றினை உருவாக்குவதற்கு மக்களுக்கு ஒருசந்தர்ப்பத்தை அளிக்கும் நோக்கமாக வரப்போகும் தேர்தலில் சகல தொகுதிகளிலும் தாம்போட்டியிடப் போவதாக மேலும் பேசுகையில் குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் பேசுகையில் தாம் தேர்தலில் கணிசமான ஆசனங்களைப் பெற்றால் தமது கொள்கைகளைக்கைவிடாது எந்தக் கட்சியையும் ஆதரிக்கப் போவதாகத் தெரிவித்தார்.

அனுரா திஸநாயக்கா பேசுகையில் தேர்தலைக் கண்காணிக்க சர்வதேச அவதானிகள் அழைக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார்; கடந்த தேர்தலில் வாக்குச் சீட்டு மோசடிகளுடன் 65 பேர்கள்வரை கொலை செய்யப்பட்டனர் என்றும் மேலும் பேசுகையில் குறிப்பிட்டார்; (எ)

## இராசி பலன்

15/10/2001
புரட்டாதி 29 திங்கள்
திரியோதசி மு.ப 6.09 வரை
துர்த்தசி பி. இ 3 54 வரை
உத்தரம் பி.ப 5.09 வரை
இராகுகாலம் 7.32-9.02
சுபநேரம் 12.20-1.32

**மேடம்**

சந்தோசமான நிலை தொழில் விருத்தி, காரியம் கைகூடும்,சத்துரு ஜெயம்.

**இடபம்**

தொழில் நன்மை, கௌரவ குறைவு மனச்சோர்வு,முயற்சி தாமதம்.

**மிதுனம்**

கலகம், நம்பிக்கைக் குறைவு,காரிய ,தாமதம்,இன சனக் கொண்டாட்டம்.

**கடகம்**

நினைத்த காரியம் கைகூடும், பிரயாணம், அந்நியர் சந்திப்பு, பொருள் சேர்க்கை.

**சிங்கம்**

வீண்விவாதம், முயற்சி கைகூடும்,மதிபபுக் குறைவு, குடுமப சுகம்.

**கன்னி**

மனக்குழப்பம், சென்ற இடத்தில் செல்வாக்கு, காரிய அனுகூலம்,போசன சுகம்.

**துலாம்**

சயனசுகக் குறைவு, காரிய அலைச்சல், கோபப்படுதல், அதிகாரம்.

**விருச்சிகம்**

காரிய அனுகூலம், சந்தோசம், போசன சுகம, உறவினர் சந்திப்பு.

**தனுசு**

தூரதேச செய்தி, தொழில் நன்மை, நினைத்த காரியம் கைகூடும்,தனலாபம்.

**மகரம்**

அச்சமான நிலை, புதிய திட்டம், பிரயாணம், உடல் வியாதி.

**கும்பம்**

வீண் தொல்லை, பிரயாணக் கஷ்டம், காரியத் தடங்கல்,திருடர் பயம்.

**மீனம்**

நண்பர்கள் உதவி, பிரயாணம், கௌரவம், காரிய அனுகூலம்.

(பழைய நேரப்படிகணிப்பிடப்பட்டது.)

வளவன்

## செய்தித் துளிகள்

### கலந்து உரையாடல்

(யாழ்ப்பாணம்)

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் செயற்படும் விளையாட்டுக் கழகங்களின் தலைவர், செயலாளர்களுக்கான கலந்துரையாடல்,எதிர்வரும் 17 ஆம் திகதி புதன் கிழமை மு ப 10.00மணிக்கு புலோலியில் அமைந்துள்ள பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக பணிமனையில் நடைபெறவுள்ளது.

மேற்படி விளையாட்டுக் கழகங்களின் சீரமைப்பு தொடர்பான முக்கிய தீர்மானங்கள் எடுககப்படவுள்ளதால் சம்பந்தப்பட்ட விளையாட்டுக்கழகங்களின் தலைவர், செயலாளர்களை தவறாது சமுகம் தருமாறு பளை பிரதேச செயலக விளையாட்டு அலுவலர் சி: ஜெயக்குமார் கேட்டுள்ளார். (உ)

### நியமனக் கடிதம் வழங்கல்

(மானிப்பாய்)

வலிகாமம் தென்மேற்கு பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட இரண்டாவது பிரிவு அபிவிருத்தித் தொண்டர்களுக்கான நியமனக் கடிதம் வழங்கும் வைபவம்இன்று மு:ப 10 00 மணிக்கு மானிப்பாய் பிரதேச சபை'ரவீன்ஸ்' கலாசார மண்டபத்தில் வெ.அ.ஜோன்சன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நியமனக் கடிதங்களை வலி தென்மேற்கு சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலர் நா:வேதநாயகன் வழங்கவுள்ளார். (உ-232)

### பாலம் திருத்தம்

(மானிப்பாய்)

நவாலி வடக்கு புலவர் குடியிருப்புக்கு முன்னால் பலகாலமாக மழை வெள்ளம் வழிந்தோடிச் செல்வதற்கான மதகு எதுவும்அமைக்கப்படாமையினால் பாதசாரிகளும், அச் சுற்றாடலில் வாழும் மக்களும் மழை காலத்தில்பெரும் இடையூறுகளுக்கு உள்ளாகி வந்தனர்.

இதனைத் தவிர்க்கும் வகையில் தற்போது புதிய பாலம் அமைக்கும் வேலை துரிதகதியில் நடைபெற்றுவருகின்றது. (உ-232)

### இன்று கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பிரிவு சுகாதாரத் தொண்டர்களுக்கான அவசர கலந்துரையாடல் இன்று காலை10.00 மணிக்கு ஸ்ரான்லி வீதியில் உள்ளமணியங்கட்டடத்தில் இயங்கும் சுகாதாரத் தொண்டர் பணிமனையில் நடை பெறவுள்ளது. (உ)

### கலைவிழா

(மானிப்பாய்)

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் மானிப்பாய் பட்டின உப அலுவலக முன்பள்ளி சிறார்களின் கலைவிழா இம் மாதம் 25 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு சபையின் 'ரவீன்ஸ்' கலாசார மண்டபத்தில் பிரதேச சபைத் தலைவர் வெ.அ.ஜோன்சன்,தலைமையில் நடைபெறவுள்ளது. (எ-232)

### ஐ. தே. க. எம். பி வீட்டுக்கு குண்டு வீச்சு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியை சோந்தஇரத்தினபுரிமாவட்ட முன்னாள பாராளுமன்ற உறுப்பினர்மகிந்தரட்ணதிலகவின் வீட்டின் மீது நேற்று முன்தினம் இனந் தெரியாதோரால் குண்டுத்தாக்குதல் மேற்கொளளப்பட்டது.

இததாக்குதலினால் வீடு சிறிய சேதததிற்கு உள்ளாகியுள்ளது. இத தாக்குதலை பொதுஜன ஐக்கிய முன்னணியைச் சேர்ந்தவர்களே மேற்கொண்டிருக்கின்றனரென தெரிவிக்கப்படுகிறது. (இ)

### ரெலிகொம் பொறியியலாளர் விபத்தில் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிககு அண்மையில நேற்று முன்தினம் இடமபெற்ற ஆட்டோ விபத்தில் சிக்கி யாழ். ரெலிக்கொம் பிராந்திய பொறியியலாளர் சுவாமபிள்ளை அன்ரனிராஜா (வயது 47) காயமடைநத நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-10]

### கணனிப் பயிற்சி நெறி

(கொழும்புத்துறை)

யாழ்.கல்வித் திணைக்கள முறைசாராக் கல்விப் பிரிவினரால் யாழ்.இந்துக் கல்லூரியில் அண்மையில் க.பொ.த (உ/த)பரீட்சைக்குத் தோற்றியவர்களுக்கான கணனிப் பயிற்சி நெறி அண்மையில் ஆரம்பிக்கப்பட்டது. (உ-223)

### மைற்ஸ்நோய் தடுப்பு

(துன்னாலை)

வடமராட்சிப் பகுதி தென்னைப் பயிர்ச்செய்கையாளர், தென்னைகளைத் தாக்கும் மைற்ஸ் நோய்க்கு எதிரான மருந்துகளைத் தெளிப்பதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

அப் பகுதி கமநலசேவை திணைக்களங்கள் மற்றும் கிராம சேவகர்கள் இதனை விநியோகித்து வருவது குறிப்பிடத்தக்கது. (உ-41)

## இன்று ஒரு தகவல்

# சேர்க்கும்பணம்செல்லுமா?

மிக்க வசதிகளுள்ள பணக்காரப் பெரியவர் ஒருவர் கையில் எப்போதும் ஒரு கழி வைத்திருப்பார். தினமும் வீட்டு வாசலில் கம்பீரமாக உட்கார்நதிருப்பார். ஒருநாள் அவர் வசதியெதுவுமில்லாத சாதாரண ஏழையைச் சந்தித்தார். அந்தப் பணக்காரர்; ''இந்தாபாரப்பா! உன்னைவிட மூடனை நான் இதுவரைக்கும் பார்த்ததில்லை. அதனால் இதோ இந்தக் கழியை இப்போது உன்னிடம் கொடுக்கிறேன் என்று சொல்லி அதை ஏழையிடம் கொடுத்து விட்டார்.

இவரும் அதை வாங்கிக் கொண்டு சரி இதை நான் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டார். இந்தக் கழியை நீ உன்னோடு வைத்திருந்து உன்னைவிட மூடனை நீ எப்போது சந்திக்கிறாயோ அப்போது அவனிடம் கொடுத்துவிடு என்றார். அவர் சரி என்று சொல்லிவிட்டு இவரும் அந்தக் கழுயை வாங்கிக்கிக்கொண்டு போய் விட்டார். அதன்பின்னர் பல வருடங்கள் ஆகிவிட்டன. தன்னைவிட மூடன் யாரையும் அந்த ஏழை பார்க்கவே இல்லை. அதனால் அந்தக்கழி இவரிடமே இருந்தது. இப்படியே காலம் போய்க்கொண்டிருந்தது. ஒருசமயம் அந்தக் கழியைக் கொடுத்த பணக்காரருக்கு வியாதியால் உடம்பு மிகவும் மோசமாகிவிட்டது. உடம்புக்கு இயலாமல் கிடக்கிறார் என்பதையறிந்த ஏழை அவரைப் போய்ப் பார்த்துவிட்டு வரலாம் என்று புறப்பட்டார். அந்த ஊருக்குப் போனார்.

அரண்மனை மாதிரி வீடு இருந்து என்ன பயன்? மிக மோசமான நிலையில் ஒரு சின்னக் கட்டிலில் இனிப் பிழைக்க மாட்டோம் என்கிற நிலையில் அந்தப்பணக்காரர் படுத்திருந்தார். இந்த ஏழை அவர் பக்கத்தில் போய் இப்போது உடம்பு எப்படி என்று கேட்டார். அதற்கு அவர் ''நான் இந்த ஊரைவிட்டுப் போகப்போகிறேன்'' என்று நினைக்கிறேன் என்றார். அப்படியானால் எப்போது திரும்புவீர்கள்? என்று கேட்கிறார் இவர். ''அந்த ஊருக்குப் போனால் திரும்பிவர முடியாது'' என்கிறார் அவர். அப்படியென்றால் அங்கே உங்கள் செலவுக்கு வேண்டிய பணத்தை எடுத்துக்கொண்டு போகிறீர்களா? என்று கேட்கிறார் இவர். அதுதான் முடியாது இந்த ஊர்ப்பணம் அந்த ஊரில் செல்லாது கொஞ்சக்காலமே வாழப் போகிற இந்தஊரில் செலவு செய்வதற்குநான்எவ்வளவோ பணம் சம்பாதித்தேன். ஆனால் அந்த ஊரில் செல்லுபடியாகக்கூடிய பணத்தைச் சம்பாதிக்காமல் விட்டுவிட்டேன் என்று சொல்லி வருத்தப்பட்டார் அந்தப்பணக்காரர்.

அது என்ன பணம் என்று கேட்கிறார் அந்த ஏழை; ''அதுதான் புண்ணியம் என்கிற பணம்; கபீர்தாசர் 'ராம நாமம்' தான் அந்தப்பணம். போகிறபோது அதைக்கூட எடுத்துக்கொண்டு போக வேண்டும்'' என்கிறார். அந்த ஏழை தன்கையில் இருக்கிற அந்தக் கழியையும், அந்தப் பணக்காரரையும்மாறிமாறிப் பார்க்கிறார்; பணக்காரர் படுக்கையில் இருந்தபடியே இதைக் கவனிக்கிறார். என்ன யோசனை? அந்தக் கழியை என்னிடமே தந்துவிடு என்னைவிட மூடன் வேறு யார் இருக்கமுடியும்? என்கிறார் இறைவன் நாமத்தைச் சொல்கிறதென்றால் வெறுமனே உச்சரிப்பது மட்டுமல்ல அது நமதுமனத்தைப்பக்குவப் படுத்த வேண்டும். புண்ணிய காரியங்களைச் செய்வதற்கு அது காரணமாக அமையும்.

இந்தக்காலத்தில் நம்மிடம் யாராவது அதுமாதிரி ஒரு கழியைக் கொடுத்து உன்னைவிட மூடனைப் பார்க்கிறபோது கொடுத்துவிடு என்று சொன்னால் அப்படிக்கொடுப்பதற்கு வெகுநாள் ஆகாது; நான்கூட அப்படிச் செய்து பார்த்தேன். என் நண்பரொருவரிடம் ஒரு போல்ட் பொயின் பேனாவைக் கொடுத்து ''நீ கொஞ்ச நாள் இதனால் எழுது அதன் பின்னர் உன்னைவிட அசடு யாராவது இருந்தால் அவரிடம் இதைக் கொடுத்துவிடு'' என்றேன். அவன்அதை வாங்கிப் பார்த்த அடுத்த வினாடியே என்னிடம் திருப்பித் தந்துவிட்டு நீதான் அந்தஅசடு என்றான். ஏனென்று கேட்டேன். ஒரு வாரத்திற்கு முன்னர் நான்தான் இதை உன்னிடம் கொடுத்தேன். இந்தப் பேனாவில் ரீஃபில் இல்லை. ரீஃபில் இல்லாத பேனை எப்படி எழுதும்?'' என்று என்னிடமே திருப்பிக் கேடகிறான்.

**தென்கச்சீ கோ சுவாமிநாதன்**

# சிறைகளில் வாடும் தமிழ் இளைஞர் விரைவில் விடுதலையாவர்

## நீதியமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறைகளில் வாடும் தமிழ் இளைஞர்களை விசாரணை செய்து விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக நீதி அமைச்சர் பட்டி வீரக்கோன் தெரிவித்துள்ளார்;

இது குறித்த அவரது செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

நாட்டிலுள்ள சிறைகளில் 100 இற்கும் மேற்பட்ட இளைஞர்கள் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் விசாரணைகளின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள்.

இவர்களது வழக்குகளை விசாரிப்பதற்கு துரித நடவடிக்கையை எடுத்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்;

இதேவேளை, அநுராதபுரம், களுத்துறை ஆகிய சிறைகளில் உள்ள கைதிகள் தமது விசாரணையை துரிதப்படுத்துமாறும் கோரி உண்ணாவிரதத்தில் குதிக்க முடிவு செய்திருப்பது குறிப்பிடத்தக்கது.

(உ-4)

## திருட்டுக்கள் தொடர்பாக

# விழிப்பாய் இருக்குமாறு மக்களுக்கு மீண்டும் பொலிஸார் அறிவுறுத்து

(யாழப்பாணம்)

யாழ். குடாநாட்டில் அண்மைக் காலங்களில் மோட்டார் சைக்கிள, சைக்கிள் திருட்டு சம்பவங்கள் அதிகரித்துக் காணப்படுவதாகவும் எனவே பொதுமக்கள் தங்கள் உடைமைகளைப்பாதுகாக்கும் விடயத்தில் விழிப்புடன் இருக்கும படியும் யாழ். பொலிஸ் நிலைய வட்டாரங்கள் எச்சரித்துள்ளன,

கடந்த சில காலங்களாக அதிகரித்துக் காணப்படும் திருடடுகளால் பொது மக்களுடைய பெறுமதியான பொருட்கள் காணாமற் போயுள்ளதாகவும், திருட்டைப் பொது மக்களுடைய உதவியுடனே நாட்டில் இருந்து ஒழிக்க முடியும் எனவும திருடர்கள் மறைந்திருக்கும் இடங்களையும் திருடர்களையும் இனமகண்டு யாழ், பொலிஸ் நிலையததிறகு பொது மக்கள் தெரியபபடுததினால் அதற்கான சன்மானம் வழங்கப்படும் எனவும் அறிவிககப்பட்டுள்ளது;

மேலும், இவ்வாறு திருடப்பட்ட பொருட்கள் சில மீட்கப்பட்டு அவை உரிய முறைப்படி நீதி மன்றில் ஒப்படைக்கப்பட்டு உரியவர்களிடம் கையளிக்க நடவடிக்கை எடுக்கப் பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுளளது;

அத்துடன், கீழ்தரபபடும் களவாடப்பட்ட மோட்டார் சைக்கிள்கள் மற்றும் உதிரிப் பாகங்கள் தொடர்பாகச் கச்சேரியில்பதிவுகளை மேற்கொள்ள வேண்டாம் எனவும்,

விற்பனை செய்யப்பட்டால் அதனை எவரையும் வாங்க வேண்டாம் எனவும் உடன் இது சம்பந்தமாக அருகில் உள்ள பொலிஸ் நிலையத்திற்கு தெரியப்படுத்தும் படியும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு களவாடப்பட்ட மோட்டார் சைக்கிள் விபரம் வருமாறு:-

★ கீறோ கொண்டா
ஜே சி.இல00கே14எப்02255
ஐ என் ஜி இல- 00கே 13 ஈ03524
பதிவு இல- என். பி.ஜி. ஏச் 6200

★ ஜமகா-50
பதிவு இல- 500- 6846
ஐ. என ஜி. இல- 4ஜி எல் 001081 ஜே சி இல- 4ஜி எல் 001081

★கொண்டா
சி- 5ப
பதிவு இல- 500-பி 6701
ஜேசி இல- சி 509643256
ஐ என் ஜி இல- சி 50 ஈ 96 48146

★ ஜமகா-50
ஜேசி இல- வி507770627
ஐ.என.ஜி இல-வி507769439
ஜமகா மார்க்50
ஜேசி இல- வி 507697721

★எம். டி-90
ஐஎன் ஜி வி5 7599795
ஜேசி வ507596795

★ஜமகா வி-50
ஐஎன்ஜி- வி50 ஈ7282447
ஜே சி- 50ஈ 7282447

★எம டி 90
ஜேசி இல- வி 90டி 325639
ஐ என் ஜிஇல-வி90டி325636

★ஜமகா 90
ஐ என் ஜி இல- 90டி321233

★ எம டி 90
ஐ என் எம்.டி 90ஈ172665
ஜே.சி எம். டி. 901726880

(உ. 10)

# கட்சி தாவியவர்களுக்கு தேசிய பட்டிலில் இடம்

(கொழும்பு)

பொது ஜன ஐககிய முன்னணியிலிருநது ஐககிய தேசிய கடசிககு மாறிய முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிர்வரும் தேர்தலின் பினனர் தேசிய பட்டியலில் இடம் ஒதுக்குவது பற்றி ஆலோசிதது வருவதாக ஐககிய தேசியக் கட்சியின் பேச்சாளர் கருணாசேன கொடிதுவக்கு தெரிவித்துள்ளார்;

இது குறித்து அவர் மேலும் தெர்வககையில்; ஐக்கிய தேசியகட்சியில இணைந்து கொண்ட பொது ஜன ஐக்கிய முன்னணியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் தேர்தலல் போட்டியிடவே விரும்புகின்றனர்.

ஆயினும் பிரசார நடவடிக்கைகளை வலுப்படுத்தும் பொருட்டே அவர்களை தேசிய பட்டியல் மூலம் பாராளுமன்றததிற்கு தெரிவு செய்ய உத்தேசிததுள்ளதாகவும் மேலும் தெரிவித்தார்.

(உ-4)

# ஒரு கோடி 24 லட்சம் பேர் வாக்களிக்கத் தகுதி

## தேர்தல் திணைக்களம் தகவல்

(கொழும்பு)

டிசெம்பர் மாதம் 5ம் திகதி நடை பெறவுள்ள 12வது பொதுத் தேர்தலில் சுமார் ஒரு கோடியே 24லட்சம் வாக்காளர்கள் வாக்களிக்கத்தகுதி பெற்றுள்ளதாக தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இம்முறை இத் தேர்தலில் தேர்தல் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட 49 அரசியல் கட்சிகளும் சுயேட்சைக் குழுக்களும் போட்டியிடவுள்ளன.

இப்பொழுது பாராளுமன்றம் கலைக்கப்பட்டு விட்டதால் புதிய அரசியல் கட்சிகள் எதனையும் தேர்தல் திணைக்களம் அங்கீகரிக்கமாட்டாது;

மாவட்டரீதியாக196பாராளுமன்ற உறுப்பினர்களும் தேசியப் பட்டியல் மூலம் 29 உறுப்பினர்களும் தெரிவுசெய்யப் படவுள்ளனர்;

இம் முறை தேர்தல் செலவாக 65 கோடி ருபா செலவு செய்யப்படவுள்ளது; ஒரு கோடியே 30 லட்சம் வாக்காளர் அட்டைக்கு இரண்டரைக் கோடி செலவிடப்படவிருப்பதாகவும் இதற்கான அச்சிடும் தாள் பிரிட்டனில் இருந்து இறக்குமதி செய்யவிருப்பதாகவும்அடுத்த வாரம் முதல் இவ்வட்டைகளை வாக்காளர்களுக்கு விநியோகிக்கும் பணி ஆரம்பமாகும் என்றும் தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது.

(வ)

# மிதிவெடியில் சிக்கிய மாடு பலி

(யாழ்பபாணம)

புல் மேய்நதுகொண்டிருந்த வேளை மிதி வெடியில் சிககிய மாடு ஒன்று ஸ்தலததிலேயே துடிதுடிததுப பலியாகியது.

இச்சமபவம் கடந்த வெள்ளிககிழமை கொககுவில் கிழக்குப்பகுதியில் இடம பெற்றுள்ளது.

(செ-19)

# பரிசளிப்பு விழா

(கந்தர்மடம்)

பெரியபுலம் மகாவித்தியாலய பரிசளிப்பு விழா இன்று திங்கட்கிழமை அதிபர்அ.கந்தையா தலைமையில் நடைபெறவுள்ளது;

இந்நிகழ்விற்கு யாழ்.பல்கலைக்கழக கல்வித்துறைத் தலைவர் பேராசிரியர் க சின்னத்தம்பி பிரதம விருந்தினராககலந்து கொள்கிறார்.

(செ-87)

# கசிப்பு உற்பத்தி அதிகரிப்பு

(துனவாலை)

தென்மராட்சியின் வரணிப் பகுதியில் கசிப்பு உற்பததி பெருமளவில் இடம் பெறுவதுடன், கசிப்பு உற்பததிப் பொருட்கள இங்கிருந்து வடமராட்சிப் பகுதிக்கு கடத்தி வருவதாகவும் தெரிய வந்துள்ளது.

கடந்தகால இடப் பெயர்வுகள் காரணமாக வரணிப் பகுதியில் குடிசனம் குறைந்து காணப்படுவதனை கசிப்பு உற்பத்தியாளர் சாதகமாகப் பயன்படுத்தி வருவதும் குறிப்பிடத்தக்கது;

(உ-41)

## கூடைப்பந்தாட்டம்

# மூன்றாம் இடத்துக்கான போட்டி இன்று

யாழ். மாவடடக் கூடைபபந்தாட்டச் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும 17 வயதுக்குட்பட்ட ஆண், பெண் இருபாலாருக்கும இடையிலான கூடைப்பந்தாட்டப் போட்டித் தொடரின் மூன்றாம் இடத்திற்கான போட்டி இன்று கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானததில் இடம் பெறவுள்ளன.

பி.ப 3.30 மணிக்கு யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை எதிர் உடுவில் மகளிர் கல்லூரியும்,

பி.ப 4.30 மணிக்கு யா. இந்துகல்லூரி எதிர் யாழ்ப்பாணக் கல்லூரி அணியும மோதவுள்ளன.

இறுதி நிகழ்வுகள எதிர் வரும 20 ஆம் திகதி சனிக்கிழமை யா/ கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில இடம பெறவுள்ளன.

பி.ப 3.00 மணிக்கு கொக்குவில் இந்துக்கல்லூரி எதிர் யா/ திருககுடும்ப கன்னியர் மடமும்,

பி.ப3 0மணிக்கு யா/ மத்திய கல்லூரி எதிர் யா/ பரியோவான கல்லூரியும் மோதவுள்ளன.

(உ-110,217)

## சிந்தனைக்கு விருந்து

### தங்கையிலும் சேட்டைவிட்டான்

கோயில் பொதுஇடங்கள் கொண்டாட்டம் அங்கெல்லாம்
நாய்போல் மணமபிடித்தே நாடுவான்- தூயஎழில்
நங்கையரில் சேட்டை விடுவான அறியாதே
தங்கையிலும் சேட்டைவிட் டான்.

- பழையவன்.

### ஒஸாமா பின்லேடனை

# ஒழிக்கும் பணிக்கு ஒத்துழைக்க

# வேண்டாமென கடும்' எச்சரிக்கை

## மீறினால் அதிபயங்கரத் தாக்குதல்

(காபூல்)

ஆப்கான் மீதானதாக்குதலுக்கு பழிவாங்கும் முகமாக மேலும் சில மேற்கத்தைய நாடுகள் மீது தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் இடம் பெறலாம் என பின்லேடனின் அமைப்பு எச்சரித்துள்ளது.

இதற்கிடையில், ஆப்கானுக்கு எதிரான தாக்குதலுக்கு ஆதரவு வழங்குவதையோ அல்லது பின்லேடனை அழிக்கும் முயற்சியில் ஈடுபடுவதையோ தவிர்த்துக் கொள்ளும் படியும், இதனை விட்டு மேற்படி நடவடிக்கையில் ஈடுபட்டால் அமெரிக்கா மீதான தாக்குதலைவிட அதிபயங்கரத் தாக்குதலை சந்திக்க நேரிடும் என்றும் வேறும் சில நாடுகளுக்கு அச்சுறுத்தல் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(உ-7)

# ஆப்கான் தாக்குதலைக் கண்டித்து நைஜீரியாவில்பெரும் வன்முறைகள்

உலக தரிசனம்

(லாகூஸ்)

ஆப்கான் மீது அமெரிக்கா தொடுத்துள்ள பதிலடித்தாக்குதலுக்கான எதிர்ப்புப் போராட்டம் நைஜீரியாவில் பெரும் வன்முறையை தோற்றுவித்துள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவித்துள்ளன.

ஆர்ப்பாட்டம் இடம்பெற்ற வேளை பல முஸ்லிம்கள் பொலிஸாரால் கொல்லப்பட்டுள்ளனர் இதற்கிடையில் நைஜீரியாவில் முஸ்லிம்கள் அதிகம் வாழும் கரானோ நகரில் முஸ்லிம்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் இடையில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டம் இன, மத வன்முறைகளை ஏற்படுத்தியுள்ளது.

இதனால் அந் நகரப்பகுதி கடைகள், வாகனங்கள் என்பன தீவைத்துக் கொளுத்தப்பட்டுள்ளதுடன் மதஸ்தலங்கள் தாக்கப்பட்டுள்ளன.

மேலும் இக்கலவரத்தில் எரிபொருள் நிரப்பப்பட்ட போத்தல்கள் வீசப்பட்டதில் நகரின் பெரிய மசூதி ஒன்று முற்றாக எரிக்கப்பட்டதுடன் 5 தேவாலயங்களும் சேதத்திற்குள்ளாகியுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

[க-7]

# கடிதமூலம் பரவும் அந்திராக்ஸ் நோய் அமெரிக்க நிபுணர்கள் பலரும் அச்சம்

(வாஷிங்டன்)

அமெரிக்காவை பரபரப்புக்குள்ளாக்கும் அந்திராக்ஸ் நோய் கடிதம் ஊடாகபரவப்படுகிறது என்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்:

பத்திரிகை நிறுவனம் ஒன்றில் பணியாற்றிய மூன்று பேருக்கு அந்திராக்ஸ் நோய் பரவியுள்ளதுபற்றி மருத்துவ நிபுணர்கள் பலர் பலவாறான ஆய்வுகளில் இறங்கியுள்ளனர்.

இதற்கிடையில் புளோரிடாமாநிலத்தில் ஒருபெண்ணிற்கு மலேசியாவில் இருந்து அனுப்பப்பட்ட கடிதத்தில் வெள்ளை நிறத்தூள் அனுப்பப்பட்டதாகவும் அதனை ஆய்வுக்குட்படுத்திய வேளை அது அந்திராக்ஸ்நோய்க்குரிய விசக் கிருமிப் பக்ரீரியாக்கள் எனக் கண்டறியப்பட்டது.

இதேவேளை கடிதமூலம் கிருமி அனுப்பப்பட்ட பெண் ஏற்கனவே அந்திராக்ஸினால் பாதிக்கப்பட்டவரின் சகோதரிஎன்பதும் குறிப்பிடத்தக்கது.

(க-07)

## தலிபான்களுக்கு உதவி

(இஸ்லாமாபாத்)

தலிபான்களுக்கு உதவும் வகையில் சுமார் 300 தொண்டர்கள் ஆப்கானிஸ்தானுள் நுழைந்துள்ளனர்.

பாகிஸ்தானைச் சேர்ந்தவர்களே இவ்வாறு சென்றுள்ளனர்.

[உ-7]

# அமெரிக்காவின் குண்டு லேடனுக்கு பூமாலை

(காபூல்)

அமெரிக்காவின் ஆப்கான் மீதான தாக்குதல்களைக் கண்டித்து பல முஸ்லிம் நாடுகளும் வேறுநாடுகளிலுள்ள முஸ்லிம் அமைப்புக்களும் பெருமளவில் ஆர்ப்பாட்டங்களை நடத்தி வருகின்றன.

இந்த ஆர்ப்பாட்டங்களில் அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷின் செயல்களைக் கண்டித்தும் புஷ்ஷை அவமானப்படுத்தும் கேலிச்சித்திரங்களை மக்கள் தாங்கிச் செல்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் பாகிஸ்தானில் இடம் பெற்ற ஆர்ப்பாட்டம் ஒன்றில் அமெரிக்க விமானம் ஒன்று சரமாரியாக குண்டுகள் பொழிவதாகவும் பின்லேடனுக்கு மாலையாக விழுவதாகவும் வர்ணிக்கும் சித்திரம் கொண்ட சுலோக அட்டைகளுடன் பொதுமக்கள் கலந்துகொண்டதாக சர்வதேச செய்திகள் தெரிவித்துள்ளன.

(உ-7)

# பிடி தொடர்பான ஆட்டமிழப்பு 3- வது நடுவரிற்கு தடை

(கன்பரா)

முதல்தர கிரிக்கெட் போட்டிகளில் பிடிகள் தொடர்பான ஆட்டமிழப்பிற்கு மூன்றாவது நடுவரிடம் தீர்ப்புக் கோருவதை அவுஸ்திரேலிய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தடை செய்துள்ளது.

எனினும், உள்ளூர் போட்டிகளில் தான் இத்திட்டம் கடைப்பிடிக்கப்படும் எனவும் அவுஸ்திரேலிய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அறிவித்துள்ளது.

சர்வதேச போட்டிகளிலும் பிடிகளுக்கு மூன்றாவது நடுவரிடம் தீர்ப்புக்கோருவதை தடைசெய்ய அவுஸ்திரேலியா முயற்சித்தது. ஆயினும் சர்வதேச கிரிக்கெட் சபை இந்த யோசனையை நிராகரித்துள்ளது.

பிடிகள் தொடர்பான ஆட்டமிழப்பு 3 ஆவது நடுவரின் தீர்ப்பிற்கு விடப்படும் போது, ஒழுங்கான முறையில் ஒளிப்பதிவு செய்யப்படாவிடத்து ஆட்டமிழப்பு வழங்கப்படுவதில்லை.

இதனாலேயே தாம் இந்த முடிவிற்கு வந்ததாக அவுஸ்திரேலிய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை பேச்சாளர் கூறியுள்ளார்.

(உ-2)

## இங்கிலாந்து அணி வெற்றி

(ஹராரே)

சிம்பாவேயில் இங்கிலாந்து அணிக்கும் சிம்பாவே அணிக்கும் இடையே நடைபெற்று வரும் 5 ஒரு நாள் போட்டித் தொடரில் ஒலவாயே நகரில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஐந்தாவதும் இறுதியுமான ஒரு நாள் போட்டியில் இங்கிலாந்து அணி 7 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாவே அணி 49:3 ஓவரில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 228 ஓட்டங்களைப் பெற்றது. சிம்பாவே அணி சார்பாக கிராண்ட்ஃபிளவர் 104 ஓட்டங்களைப் பெற்றார்.

பதிலிற்குத் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 43.4 ஓவரில் 3 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. இதன் மூலம் 5 ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் 5;0 என்ற கணக்கில் இங்கிலாந்து அணி வெற்றி பெற்றுள்ளது.

நீண்ட இடைவெளியின் பின் இங்கிலாந்து அணி பெற்ற சிறந்த வெற்றியும் இதுவாகும்.

(உ-2)

# அமெரிக்கத் தாக்குதலால் சிறுவர் உளப் பாதிப்பு

(காபூல்)

ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்கா நடத்திவரும் மிலேச்சத்தனமான தாக்குதல்களால் அப்பாவிச் சிறுவர்கள் உடல், உள ரீதியில் பெரும் பாதிப்படைந்து வருவதாக ஐக்கிய நாடுகள் கண்டன அறிக்கை வெளியிட்டுள்ளது.

பெரும் சத்தத்துடன் வெடிக்கும் ஏவுகணைகள், மற்றும் நச்சு வாயுக்கள் போன்றவற்றினால் அப்பாவிச் சிறுவர்கள் பாதிப்படைகிறார்கள். மேலும் ஆப்கானில் பட்டினியால் சிலர் பலியாகியுள்ளனர். இதற்கு அமெரிக்கா பதில்தர வேண்டும்.

அப்படி தமது யுத்தத்தை நிறுத்த தயார் இல்லாத போது அகதிகள், குழந்தைகளுக்கு நிவாரண உதவி, வழங்க இடையிடையே யுத்தத்தை நிறுத்த வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபை கேட்டுள்ளது.

(எ-7)

# ஆர்ப்பாட்ட ஊர்வலத்துள் பேருந்து புகுந்தது

## 9பேர் பலி 50 பேர் படுகாயம்

[டாக்கா]

பங்களாதேஷில் ஆர்ப்பாட்டக்காரர்களின் ஊர் வலத்துக்குள்கட்டு மீறிபஸ் ஒன்று புகுந்ததில் குறைந்தது 9பேர் உயிரிழந்தனர் 50திற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

கடல்துறை நகரான சிட்காங் நகரில் பெரு வீதியொன்றில் இத் துயரச் சம்பவம் நிகழ்ந்தது.

15 பேர் இதில் இறந்திருக்கலாமென்று பிறிதொரு செய்தி தெரிவிக்கிறது.

தலிபான் மீது அமெரிக்கா போர் தொடுப்பதைஎதிர்த்து மக்கள் பெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் ஈடுபட்ட வேளை மேற்படி சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதனால் ஆத்திரமடைந்த ஆர்ப்பாட்டக் காரர்கள் வீதியில் நின்ற சென்ற வாகனங்களையும் கடைகளையும் அடித்து நொருக்கினர்.

இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலங்களும்வன் செயல்களும் டாக்கா உட்பட பலநகர்களில் பரவி பலத்தசேதத்தை யேற்படுத்தியிருக்கின்றன (து)

### கடிதம் மூலம்

# அந்திராக்ஸ் பக்ரீறியா பரப்ப முனைந்தவர் கைது

(ரோம)

இத்தாலியில் சந்தேகத்திற்கிடமான கடிதம் ஒன்றினை விநியோகித்த தபால் ஊழியர்கள் ஐவர் பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டு வைத்தியசாலையில் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

மேற்படி கடிதத்தில் காணப்பட்ட வெள்ளை நிறப் பவுடர் அந்திராக்ஸ்பக்ரீறியாவாக இருக்கலாம் என்ற அச்சம் காரணமகவே இவர்கள் வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தப் பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இது இவ்வாறிருக்க மேற்படி கடிதத்தை அனுப்பியிருக்கலாம் என்ற சநதேகத்தின் பேரில் பொலிஸார்ஒருவரைக் கைது செய்துள்ளதுடன்,

இவருக்கு 6 மாதச் சிறைத் தண்டனை விதிக்கப்படலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகிதுற.

(உ-2)

# பாபாவின் வடிவில்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

ருக்குள்ள அபரிமிதமான அன்புக்கு அதி நவீன வசதி கொண்ட மருத்துவமனை ஒரு சிறந்த எடுததுக்காட்டு. ஓர் ஒதுக்குப்புறக் கிராமத்திலே குறுகிய காலசாதனையாக அதைக் கட்டிமுடித்துப் பராமரித்து வருகின்றார். இம் மருத்துவ மனையில் மிகவும் சிக்கலான இருதய அறுவைச் சிகிச்சைகள, சிறுநீரக மாற்றுச்சிகிச்சைகள், கண் சத்திரச்சிகிச்சைகள், மூளை அறுவைச் சிகிச்சைகள் ஆயிரக்கணக்கில் இலவசமாக நடக்கின்றது.

ஆந்திரத்தில் ராயலசீமா என்பது நீர்வளமற்ற வரண்ட பிரதேசம். ஆந்திர அரசும், மத்திய அரசும கடந்த 50 வருடங்களாகச் செய்ய முடியாததைப் பாபா ஒருவருடத்துக்குள் செய்து முடித்து. அப்பிரதேசத்திலுள்ள 1200 க்கு மேற்பட்ட கிராமங்களுக்கு நல்ல குடிதண்ணீர்வசதி ஏற்படுத்திக் கொடுத்தார்.

### காப்பாற்றியவர்

'நான் அந்தரங்க சுத்தியோடும் அன்போடும் உளமாரப் பிரார்த்தித்த போதெல்லாம் உடனுக்குடன் அவர் அருட்கடாடசம் கிடைத்துள்ளது.

நிர்ப்பந்தத்தினால் பாகிஸ்தானுடன் மூண்ட மூன்று யுத்தங்களிலும் அவர்களின் துப்பாக்கிக் குண்டுகளிலிருந்து என்னைக் காப்பாற்றியுளளார். அவ்வண்ணமே சீனப் பீரங்கித் தாக்குதல்கள், கொங்கோவில் ஐ. நா. வின் அமைதிகாக்கும் படையில் கடமையாற்றியபோது வெளிநாட்டுக் கூலிப்படையினரின் இயந்திரத் துப்பாக்கிச் சூடு மோட்டார்வாகன விபத்துக்கள், லடாக் பிரதேசத்தில் ஹெலிகொப்டர் விழுந்து நொருங்கிய விபத்து, 1986 ஏப்ரலில் ஹைதராபாத்தில் ஏற்பட்ட மோசமான மாரடைப்பு, இவ்வாறாக இன்னும் பல கஷ்டங்கள், ஆபத்துக்கள், நோய்கள் மனக் குழப்பங்களிலிருந்தெல்லாம அவர் என்னைக் காத்தருளியிருக்கின்றார். இத்தனையும சாயிநாதன்மேல் நான் கொண்ட பக்தியை ஏற்று அவர் அமோகமாகப் பொழிந்த அருளின் விளைவாகும்' என்று இளைப்பாறிய தென்னிந்திய இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல எஸ். பி. மகாதேவன் கூறியுள்ளார். □

## ப.நோ.கூ.ச கிளை அதே இடத்தில் இயங்கும்

(கொழும்புத்துறை)

யாழ் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் புங்கன்குளம் வீதியிலிருந்த 17ஆம் இலக்கக் கிளையை மீண்டும் அதே இடத்தில் திறப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

அசாதாரண சூழ்நிலைக்குப்பின்ஆனைக் கோட்டைப் பகுதியில் இக்கிளை இயங்கி வநததும், இக்கிளையை திறக்கக்கோரி அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்து வந்தமையும் தெரிந்ததே.

(உ-223)

எள்ளாமை வேண்டுவான் என்பான் எனைத்தொன்றும்
கள்ளாமை காக்க தன்நெஞ்சு

குறள்

## வலம்புரி

### நிவாரண மோசடி!

மானிப்பாய் பலநோக்கு கூட்டுறவு கிளைகளுக்கு நிவாரண விநியோகத்திற்காக வழங்கப்பட்ட 188 அரிசி மூடைகள் தனியார் கடைகளிலும், வீடுகளிலும் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

மானிப்பாய் பிரதேச சபைத்தலைவர் வெலிச்சோர் அன்ரன்ஜோண்சன் தலைமையில் சென்றகுழு இந்த 188 அரிசி மூடைகளையும் கைப்பற்றியுள்ளது. இடம்பெயர்வு,யுத்த நெருக்கடி இவற்றின் மத்தியில் ஒருவேளை உணவுக்காக ஏழைமக்கள்திண்டாடிக் கொண்டிருக்கும் போது, அவர்களுக்காக அரையும் குறையுமாக வழங்கப்படும் நிவாரணத்தையே சூறையாடும் பிரகிருதிகளை ஒருபோதும் மன்னிக்க முடியாது.

188 அரிசிமூடை கைப்பற்றப்பட்ட போதிலும் எமது அரச அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுப்பார்களா என்பது கேள்விக்குறியே.

நல்லூர் பிரதேச செயலகத்தில் நிவாரண மோசடியில் ஈடுபட்ட கிராம உத்தியோகத்தர்களை இனங்கண்டு, உரிய இடங்களுக்கு அறிவிக்கப்பட்ட போதிலும், அவற்றை மூடிமறைப்பதில் அதிகாரிகள் ஈடுபட்டார்களே யொழிய சம்பிரதாயத்திற்குக் கூட நடவடிக்கை எடுத்ததாக இல்லை.

உனக்குத் தலை எனக்கு ஈரல் என்ற வகையில்நிவாரண மோசடிகள் நடக்குமாயின் எப்படி நடவடிக்கை எடுக்க முடியும்.

பொதுமக்கள் திரண்டு நிவாரண மோசடிக்கெதிராக அரச அதிகாரிகளிடம் நியாயம் கேட்டால் என்னை விட்டால் நேர்மையானவர்கள் ஒருவருமில்லையென்ற நியாயங்கள் தூள் பறக்கும்.

தட்டிக்கேட்க வேண்டியவர்களே மோசடியைத் தட்டிக் கொடுப்பார்களாயின் நிலைமை படுமோசமாகவே மாறும். எனவே உயர் பதவிகளை - உயர் ஆசனங்களை அலங்கரிப்போர் தமக்குக் கிடைத்த பதவிக்கு நன்றியுடையவர்களாக, கிடைத்தசந்தர்ப்பத்தை ஏழைமக்களின் ஏற்றத்திற்குஉதவஉழைப்பவர்களாக மாற வேண்டும். அவ்வாறு ஒவ்வொரு அதிகாரிகளும் நீதி-நேர்மையுடன் செயற்படுவார்களாயின், கீழ்மட்ட ஊழியர்கள், சங்கத்தில் வைக்க வேண்டிய அரிசி மூடைகளை வீடுகளில் வைக்க மாட்டார்கள் இது திண்ணம்.

# தேசிய மட்டத்தில் ஆரம்ப நிலை மாணவரின்

# கணித பாட அடைவில் ஏற்றத் தாழ்வுகள்

(நேற்றைய தொடர்ச்சி)

(5)

### கணித பாட விதானம்

பங்கொக் யுனெஸ்கோ நிறுவனம் கிராமிய ஆரம்பக் கல்வியில் அடைவு மட்டத்தை மேம்படுத்துவதற்கான ஆய்வுகளையும், செயல் வேலைத் திட்டத்தையும்மூன்றாம்உலக நாடுகளில் ஆரம்பித்தது; இலங்கை இவ்வேலைத் திட்டத்தைப் பயன்படுத்தி தரம்1 இல் இருந்து 5 வரை மொழியிலும், கணிதத்திலும் அடைவு மட்டத்தை தீர்மானிப்பதற்கு ஆய்வொன்றை நடத்தியது. இலங்கையில் முதன் முறையாகமேற்கொள்ளப்பட்ட இக்கற்கையானது தேசிய மட்டத்தில், ஒப்பீட்டளவில் சமூக, பொருளாதார தரங்கள்குறைந்தஅநேக மக்கள் வாழும் மாவட்டங்களில்மேற்கொள்ளப்பட்டது; இம் மாவட்டங்களின் தேசிய தரங்கள் அநேகமாக ஏனைய மாவட்டங்களின் தரங்களிலும் குறைவாகும்: ஆனால் 1971-1981 காலப் பகுதியாகிய ஒரு தசாப்தத்திற்குப்பின்னர்அவற்றின்தரங்கள்மேலும் கீழிறங்கி விட்ட ஒரு கவலைக்குரிய நிலையைக் காட்டியதற்கான காரணங்களை அடைவு மட்டங்களின் மேற் சுமத்தலாம்;

ஆரம்ப நிலைக் கல்வியைப் பூர்த்தி செய்பவர்களின் எண்ணிக்கை பிள்ளைகளின் அடைவு மட்டத்தின்குறிகாட்டிகளில் ஒன்றாகும்; ஆரம்ப நிலையில் வித்தியாசமானகட்டங்களில் பெறப்படும் சிறந்த தேர்ச்சி நீண்ட காலத்துக்கு பாடசாலையில் இருப்பதற்கான கூடிய ஆசையை வளர்க்கும். ஆனால் ஒரு தசாப்தத்தில் ஆரம்பக் கல்வியில் பங்குபற்றல் விகிதம் தேசிய நிலை ஒழுங்கில் கீழிறங்கி விட்டதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. எழுத்தறிவு விகிதத்திலும் ஒப்பீட்டளவில்ஒரு தசாப்தத்தில் குறைவையே காட்டியது. இக்கற்கைக்கு தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகள் சமூக, பொருளாதாரக் கலாசாரக் காரணிகளினால் தனிப்படுத்தபட்ட அதாவது ஒப்பீட்டளவில் வசதியும், வளமும்குறைந்தபாடசாலைகள் ஆகும்;

முறைசார்ந்த ஆரம்பநிலை கணிதபாடத்திட்டம் 25எண்ணக் கருக்களை உள்ளடக்கியது. இவ்வெண்ணக் கருக்களின் அடைவை அறிவதற்காக ஒவ்வொரு தரத்தின் மீதும் (தரம் 1-இல் இருந்து 5 வரை) குறித்தபாடத்திட்ட உள்ளடக்கங்களுக்கேற்ப சோதனைக்கருவிகளதயாரிக்கப்பட்டு பெறப்பட்ட தரவுப் பகுப்பாய்வுகளிலிருந்து பின்வரும் கண்டுபிடிப்புக்கள் பெறப்பட்டன;

**தம்பியப்பா காங்கேசபிள்ளை**

M.Phil (Edu) B.Sc., P.G.Dip.in-Edu. SLEAS

முது நிலை விரிவுரையாளர் (கணிதம்)

பலாலி ஆசிரியர் கலாசாலை.

1; கிராமப்புற வசதியற்ற பாடசாலைப் பிள்ளைகளின் கணிதத்திற்கான சராசரிஅடைவு எதிர்பார்த்ததர[வகுப்புர 1 மட்ட அடைவுடன் ஒப்பிடுகையில் தரம்1 இலிருந்து தரம் 5 வரை படிப்படியாகவும், பொருண்மையானதாகவும் குறைவதுடன் தரம்1 இல் இருந்துதரம் 2 வரைஇவ் வீழ்ச்சி மிகத் தெளிவானதாக இருக்கின்றது;

2; வசதியற்ற பாடசாலைகளுக்கிடையே கணித எண்ணக் கருக்களில், அடைவில் பொருண்மையான பிரதேச ஏற்றத் தாழ்வு இருப்பதுடன்இது ஐந்து தரங்களிலும் காணப்படுகிறது;

3; எண்ணக் கருக்களில் அடைவு, எண்கள் தொடர்பாகஎல்லாத்தர மட்டங்களிலும் ஒப்பீட்டளவில் நன்கு அடையப்பட்டுள்ளது. எனினும் வடிவமும், சமச்சீரும், மெற்றிக் முறை பணம் போன்ற எண்ணக் கருக்கள் தொடர்பான செய்கை அதிகரிக்கும்தர மட்டத்துடன் வீழ்ச்சியைக் காட்டுகின்றது.

4; தரம் ஒன்றில் அடைவு மிகத் திருப்தியாக இருந்தும் தரம் ஒன்றில் கூடிய திறமையைக்காட்டியபிள்ளைகள் பின்னர் அடைவில் பலவீனமடைந்தனர் இது உண்மையில் சமூகப் பொருளாதார பின்தங்கலில் இருந்து பிள்ளையின் உள்ளார்ந்த சக்திகளைப் பாதுகாத்து வைப்பதற்குக் கல்வி முறைமை தவறியமையைக் குறிப்பிடுகின்றது;

5; இப்பாடசாலைகளிலுள்ள மாணவர்களுள் 50%இற்கும் குறைவானவர்களால் தரம் 5 இல் 15/20 கணித எண்ணக் கருக்களும், தரம் 4 இல் 9/26ம், தரம் 3இல்3/10ம் தரம்2 இல்6/16ம், தரம் 1 இல் 1/12ம் மட்டுமே அடையப்பட்டது; இது கிராமப்புறப்பாடசாலைகளில் எல்லாத் தரங்களிலும் இவ் எண்ணக் கருக்களைக்கற்பித்தலில்கூடிய வலியுறுத்தல்வழங்கப்படவேண்டுமென்பதைக் குறித்துக்காட்டுகின்றது;

6; மொழிக்கும் கணிதத் திற்குமிடையில் அடைவில் பொருளுடைய தொடர்பு உண்டு என்பதை இக்கற்கை தெளிவாகக் காட்டியது; இது மொழித் திறன்கள் கணிதத்தில் அடைவைத் தீர்மானிக்கும் காரணிகளுள் ஒன்றுஎன்பதைக்குறித்துக் காட்டுகிறது.பொதுவாக மொழி மற்றைய துறைகளின் அடைவில் செல்வாக்குச் செலுத்தும் பொதுத்திறன்எனக்கூறப்படுகின்றது. குறிப்பாக வசதி குறைந்த பாடசாலைகளில் வாய் மொழியூடகமே மேலாதிக்கம் செலுத்துகிறது. உயர்தர மட்டங்களில் கணிதத்திற்கும், மொழிக்கும் இடையேயான அதிகரிக்கும் உயர்இணைப் பின்போக்கிற்கும் காரணம் கற்பித்தலில் வாய்மொழி ஊடகத்தின்அதிகரிப்பின் ஆதிக்கமாக இருக்கலாம். தரம் 1 இலும் 2 இலும் ஓரளவிற்கேனும் செயற்பாட்டு அடிப்படையிலமைந்த கணிதக் கற்பித்தல் நடை பெற்ற போதிலும், தரம் 2 இற்குப்பின்னர் ஆசிரியர்கள் எந்த எண்ணக் கருவையும் மாணவர்கள்கேட்டுக்கிரகித்துக் கொள்வர் எனக் கருதுவதால் சிறந்தவாய் மொழித் திறன்களையுடைய பிள்ளைகள்மாத்திரமே கணிதபாடத்தை ஏனையோரைவிடச்சிறப்பாகக் கிரகித்துக் கொள்கின்றனர்;

ஒட்டு மொத்தமாக நோக்கும் போது கல்வியில் குறைந்த அடைவின் மீது செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் வறுமையில் நிலைத்திருக்கும் வரையறைகளேயாகும். குறைவசதியுள்ள பாடசாலைகள் சக்தியற்ற சமூக பொருளாதாரப் பின்னணியை பிரதிபலிப்பதோடு அச்சக்தியற்ற சமூக பொருளாதார நிலையை நிலைத்திருக்கவும் செய்கிறது; மௌன கலாசாரமும், வறுமை கலாசாரமுமே இக்குறை வசதியுள்ள பாடசாலைகளின் பண்புகளாகும். மொழி, கணிதத் திறன்களானது இன்றைய 21 ஆம் நூற்றாண்டில் பயனுடைய சமூகப் பொருளாதார நபராக எந்தவொருவரும் தொழிற்படுவதற்குத் தேவையான அடிப்படைத் திறன்களாகக் கருதப்படுகின்றன. இக்கற்கை குறைவசதியுள்ள பாடசாலைகளில் கற்கின்றவர்களில்கூடியவிகிதத்தினர் கணிதத்தில் மிகக் குறைந்த தேர்ச்சியை அடைய முடியாதென்பதைக் காட்டுவதற்கு போதிய அத்தாட்சிகளையும் வழங்கியுள்ளது. ஆரம்பப் பாடசாலைகளுக்கான புதிய கணித பாடவிதானம் அறிமுகப்படுத்தப்பட்டும் இன்னும் ஆசிரியர்களுக்குபொருத்தமான கற்பித்தல் முறைகளும், முழுமையாக வழங்கப்படவில்லை. முயற்சிகள் எடுக்கப்பட்டன. ஆனால் பலனளிக்கவில்லை. கற்பித்தல் முறையில் முன்னேற்றம் ஏற்பட்ட போதிலும் அது குறைவசதியுள்ள பிள்ளைகளைச் சென்றடையவில்லை. உண்மையில் குறைவசதியுள்ள சூழலுக்கு பொருத்தமானவாறு கற்பித்தல் அணுகு முறைகளும் மாற வேண்டும்.

எனவே அடைவு மட்டங்களை உயர்த்த கற்பித்தல் முறையியலுக்கும் உரிய வலியுறுத்தல் அவசியம்;

(தொடரும்)

---

## தினசரி தியானம்

### வியாகூலம்

தாகமறிந்து இன்ப நிட்டை
தாராயேல் ஆகெடுவேன்
தேகம் விழுந்திடின் என்
செய்வேன் பராபரமே;

-தாயுமானவர்

கருணைக் கடலே, உன்னை நான் அணுகவில்லையே என்ற வியாகூலம் என் உள்ளத்தில் பொங்கிக் கொண்டிருக்குமாக;

பணம், போகம், பதவி, புகழ் ஆகியவைகளைப் பற்றி அல்லும் பகலும் மனிதன் வியாகூலப்படுகிறான் அதிவிரைவில் அவையாவும் மறைந்து போகக் கூடியவைகள் என்பதை அவன் எண்ணிப் பார்ப்பதில்லை; அதே வியாகூலத்தைக் கடவுளின் பொருட்டு அவன் அடைவானாகில் அது நித்தியானந்தத்துக்கு வழிகாட்டிவிடும்;

-ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்

---

# வளர்பிறை போல

# வேதாந்தப் வளநம்

(நல்லூர்)

''வேதாந்த மடம் என்கின்ற இப் புனித திருமடம் இறையருளால் பண்டைய பெரு நிலையில்பிரதிஷ்டையாகி மிளிரும் என்பது திண்ணம்: நாம் இப் புனித மடத்துக்கு வந்து புனிதமடைந்தோம்'' இவ்வாறு சேக்கிழார் அடிப்பொடி இலக்கிய கலாநிதி பிரம்மஸ்ரீ நடராஜன் இராமச்சந்திரன் அண்மையில் திருநெல்வேலி கந்தர்மடம் ஸ்ரீ சிவகுருநாத குருபீட வேதாந்த மடத்தில் உரையாற்றும் போது கூறினார்.

வேதாந்தம் என்பது பாரெங்கும் மணம் வீசும் தன்மையுள்ளது; தனக்கெனத் தனித்துவமான தனிப்பெருமையுடையது; இருடிகளாலும், முனிவர்களாலும் போற்றிக்காக்கப் படுவது; இப்போது வேதாந்தத்தின்சீர்மை குன்றியது போலத் தோற்றம் காணப்பட்டாலும் அதன் பெருமை வளர்பிறை போலச் சிறந்தோங்கும் என்று மேலும் பேசுகையில் அவர் குறிப்பிட்டார்.

''குரு பீடாதிபதி ஸ்ரீமத் சோமஸ்கந்தவேள்சுவாமிகள் அருளாசியுரையையும், முன்னாள்யாழ் இந்துக்கல்லூரிப் பிரதிஅதிபர்க.சிவராமலிங்கம் வரவேற்புரையையும், நிகழ்த்தினார். அருளிசையரசு, தாவடியூர். கே.எஸ். ஆர். திருஞான சம்பந்தன் ஓதுவார் திருமுறை ஓதினார்;

பேராசிரியர்கள் இ.குமாரவடிவேல், சிற்றம்பலம் உட்பட பலர் இவ் வைபவத்தில் கலந்து கொண்டனர்.

(எ-103)

# அமெரிக்கா - பிரிட்டன் மீது
# மீண்டும் தாக்குதல் நடாத்துவோம்
## பின்லேடனின் அமைப்பு எச்சரிக்கை

(காபூல்)

அமெரிக்கா, பிரிட்டன் நாடுகளின் விமானங்களைக் கடத்தி அந்நாட்டு முக்கிய இடங்கள்மீது மீண்டும் தாக்குதல் நடாத்தப்போவதாக ஒஸாமா பின்லேடனின் ஆதரவில் இயங்கும் அல்குவாடா அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

கட்டாரில் உள்ள அல் ஜெசிரா செய்ம்மதி நிலையத்திற்கு அவ்வமைப்பால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள பதிவு செய்யப்பட்ட ஒலிநாடாவில் இவ்வாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இவ்ஒலிப்பதிவு நாடாவில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

அமெரிக்காவும், பிரிட்டனும் பாலஸ்தீனத்தில் உள்ள யூதர்களுக்கு வழங்கும் ஆதரவை நிறுத்தவேண்டும். காஷ்மீரில் முஸ்லிம்களுக்கு எதிராகப்போராடும் இந்துக்களுக்கு ஆதரவோ, அல்லது ஆயுதங்களோ வழங்கக்கூடாது. ஈராக்கில் விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரதடை உட்பட சகல தடைகளையும் நீக்க வேண்டும்.

இக்கோரிக்கைகளை இரு நாடுகளும் ஏற்காவிட்டால் முஸ்லிம் மக்களின் புனித புயல்ஓயப்போவதில்லையென அந்நாடாவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அல்குவாடா அமைப்பின் பூச்சாண்டி அச்சுறுத்தலுக்கு பயப்படப்போவதில்லையென வெள்ளை மாளிகை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (ந-4)

## சாவகச்சேரியில் குண்டுகள் மீட்பு

(கொழும்பு)

சாவகச்சேரி வடக்குப்பகுதியில் நேற்றுமுன்தினம் படையினர் நடத்திய தேடுதலின் போது முப்பது கைக்குண்டுகளையும் ரி-56 ரக துப்பாக்கிக்குரிய ஆயிரத்து 560 ரவைகளையும் படையினர் கண்டெடுத்துச் செயலிழக்கச் செய்துள்ளதாக விசேட ஊடகதகவல் நிலையம் அறிவித்துள்ளது.

இதேவேளை தனங்கிளப்பு பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 81 மில்லி மீற்றர் கைக்குண்டுகள் கிளைமோர் குண்டுகள் இரண்டு 60மில்லி மீற்றர்மோட்டார் குண்டுகள் ஆறு கைக்குண்டு ஒன்றுஆகியவற்றையும் படையினர் கைப்பற்றியுள்ளதாக ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது. (ந-4)

## ஜே. வி. பியின் மஹரகம அலுவலகம்மீது தாக்குதல்

(கொழும்பு)

கொழும்பு மஹரகமவில் அமைந்துள்ள ஜே. வி. பியின் ஒருங்கிணைப்புத் தலைமையகம் நேற்று தாக்கப்பட்டு சேதமாக்கப்பட்டுள்ளது.

ஜே. வி. பிக்குள் அதிருப்தியாளர் எனக்கருதப்படும் ரவி கருணாநாயக்கவின் ஆதரவாளர்களே இத்தாக்குதலை நடத்தியதாக மஹரகம தொகுதிக்கான ஜே. வி. பியின் செயலாளர் அனுர சோமபால தெரிவித்துள்ளார். (ந-4

## எஸ். பி. திஸநாயக்காவின் சகோதரரின் வாடி வீட்டில் பொலிஸார் தேடுதல்

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் எஸ். பி. திஸநாயக்காவின் அம்பாந்தோட்டையிலுள்ள அவரது சகோதரனின் வாடி வீடு கொழும்பிலிருந்து வந்த விசேட பொலிஸ் குழுவினரால் நேற்று அதிகாலை சல்லடை போட்டு தேடுதல் நடத்தப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக எஸ். பி. திஸநாயக்கா கருத்துத் தெரிவிக்கையில் சட்டவிரோத ஆயுதங்கள், வெடிகுண்டுகள் இருப்பதாகத் தெரிவித்தே பொலிசார் தீவிர சோதனை நடத்தியதாகவும், சோதனை நடத்த அந்தப் பொலிஸார் சட்டரீதியான அனுமதிப்பத்திரம் எதுவுமின்றி சோதனை நடத்தியதாகவும் இது தொடர்பாக பொலிஸ்மா அதிபரின்கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ், மகிந்தவிஜயசேகர மற்றும்எதிர்வீரபிறேமரத்தின ஆகியோர் நேற்று முன்தினம் கதிர்காமம் செல்லும் வழியில் இடைமறிக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ந- 5)

## மின் விளக்குகள் சீரில்லை

(துன்னாலை)

கரவெட்டிப் பகுதி வீதிகளில் பொருத்தப்பட்டுள்ள மின் விளக்குகள் சீராக எரிவதில்லை என அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

வீதிகள் இருட்டில் மூழ்கியுள்ளமையானது திருடர்களின் செயலை ஊக்குவிப்பதாக அமைவதாகவும் பொது மக்கள் தரப்பில் கருத்துத் தெரிவிக்கப்படுகிறது. [உ-41]

## நிதி திரட்டல்

[துன்னாலை]

கரவெட்டிப் பிரதேச செயலக கட்டட நிர்மாணப் பணிக்கான நிதி திரட்டும்பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. [உ-41]

# ஐ. தே. கட்சிக்கு தாவியவர்களுக்கு மக்கள் தகுந்த பாடம் புகட்டுவர்
## பொ. ஐ. மு. செயலாளர் ஜயரட்ண

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணியின் கொள்கைகளை விற்று ஐக்கிய தேசியக் கட்சிக்கு மாறியவர்களுக்கு எதிர் வரும் பொதுத்தேர்தலில் மக்கள் தகுந்த பாடம் புகட்டுவார்கள்.

அரசில் இருந்து எவ்வளவு பேர்விலகினாலும்அதுபொது ஜன ஐக்கிய முன்னணியின் பலத்தில் எந்த விதமான மாற்றத்தையும் கொண்டு வரப்போவதில்லை மாறாக இத்தேர்தலில் வெற்றிவாகை சூடப்போகிறவர்கள் நாங்களே இவ்வாறு பொது ஜன ஐக்கிய முன்னணியின் செயலாளரும்அமைச்சருமான டி.எம்.ஜெயரட்ணா சூளுரைத்துள்ளார்.

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு மீதுஐக்கிய தேசியக் கட்சி கொண்டுவந்த நம்பிக்கை இல்லாப் பிரேரணையை அடுத்து அரசில் இருந்து ஐக்கிய தேசியக் கட்சிக்கு மாறியவர்கள் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையிலேயே அமைச்சர் டி. எம். ஜயரட்ணா மேற் கண்டவாறு சூளுரைத்துள்ளார்.

முன்னாள் அமைச்சர்கள் எஸ். பி. திஸநாயக்கா, பேராசிரியர் ஜி எல். பீரிஸ், நந்த மித்திர எக்கநயக்கா லஷ்மன் கிரியல்ல முன்னாள் பிரதி சபாநாயகர் பிரிகேடியர் சரத்முனசிங்கா உட் பட11 பேர் பொதுஜன ஐக்கியமுன்னணியில் இருந்து ஐக்கிய தேசியக் கட்சிக்கு மாறியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

### ஐ-தே.க

பொதுஜன ஐக்கியமுன்னணியும் ஜே வி.பியும் கூறிவரும் குற்றச்சாட்டை மறுத்துள்ள திஸநாயக்கா விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் இந் நாட்டுஅரசியலில் ஒரு முக்கிய பாத்திரம்.

இந்நிலையில் அவரை ஒதுக்கிவைத்துவிட்டு இனப் பிரச்சினைக்கும், யுத்தத்திற்கும் தீர்வுகாணமுடியாது.

எனவே எதிர்வரும்பொதுத் தேர்தலில் ஐக்கியதேசிக்கட்சி வெற்றிபெற்றுஆட்சிஅமைக்குமாயின் வன்னிசென்று எமது நாட்டின் பிள்ளைகளுடன் பேச்சு வார்த்தை நடத்துவோம் என்றும் கூறினார். (ந)

### புளொட்டைச்

புளொட்டை தொடர்பாக கருத்துத்தெரிவித்த போதே செல்வம் அடைக்கலநாதன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், புளொட் அமைப்பு பொது ஜன ஐக்கிய முன்னணியுடன் இப் போது தொடர்பு கொண்டிருப்பதால் அவ்வமைப்பை தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்புடன் சேர்த்துக் கொள்ள முடியாதிருப்பதாகவும் தெரிவித்தார். (ந)

# தமிழர் விடுதலைக் கூட்டணி கொழும்பில்போட்டியிடாது?

[கொழும்பு]

தமிழர் விடுதலைக் கூட்டணி கொழும்பில் போட்டியிடுவது தொடர்பாக நேற்றுக் காலை கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில் கூடி ஆராய்ந்துள்ளன.

இக் கூட்டத்தில் சட்டத்தரணிகள், அகில இலங்கைஇந்து மதத் தலைவர், கைலாசபதிபிள்ளை, செயலாளர் நீலகண்டன் உட்பட பலர் கலந்து கொண்டனர்,

கொழும்பில் தமிழர் விடுதலைக் கூட்டணி போட்டி இடும் பட்சத்தில் மலையகத் தமிழர்கள் பிரதி நிதித்துவத்தை இல்லாமல் செய்வதற்கு வழிவகுக்கும்என்பதால்போட்டியில் இருந்து விலகிக்கொள்வது நல்லதென்று அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் காங்கிரஸ் கட்சிச் செயலாளர் கலாநிதி குமரகுருபரனும் கலந்து கொண்டார்.

கூட்டத்தில் கலந்துகொண்டபிரமுகர்கள் தெரிவித்த கருத்துக்களின் அடிப்படையில் தீர்மானம் எடுக்கப்படும் என்று கூட்டணியின் செயலாளர் இரா. சம்மந்தன் தெரிவித்துள்ளார். (வ)

### இடைக்கால

ஆண்டு ஜனவரியில்புதியஅரசு அமைக்கப்பட்டதும் அதன் வரவு செலவுத் திட்டத்தில் சம்பள நிர்ணய ஆணைக்குழு சிபார்சு செய்யும் புதிய சம்பள உயர்ச்சியை நாம் வழங்கவுள்ளோம்.

அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சம்பள அதிகரிப்பு 1200 ரூபா வினையும்மனிதாபிமான அடிப்படையில் தனியார் துறையினரும் கூட்டுறவுத்துறையினரும் ஊழியர்களுக்கு வழங்க முன்வர வேண்டும் என்றும் ஜனாதிபதி கேட்டுக் கொண்டுள்ளார். (வ)

### யாழ்ப்பாணத்தில்

இது தொடர்பாக கட்சியின் பொதுச்சபையினதும், செயற்குழுவினதும் சம்மதம் பெறப்பட வேண்டும் என்றும் கட்சியின் செயலர்கலாநிதி குமரகுருபரன் தெரிவித்தார்.

இது தொடர்பாக நேற்று மாலை நடைபெற்ற கூட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் மாவை சேனாதிராசா, காங்கிரஸ்சார்பில் அ. விநாயகமூர்த்தி கலாநிதி என். குமரகுருபரன் எஸ்.நடராசா ஆகியோர் கலந்துகொண்டனர். (வ)

## வில்லிசை

வானொலி தொலைக்காட்சி கலைஞர்களின் சோக்கெல்லோ சண்முகம் குழுவினர் வழ்ங்கும் வில்லிசை நிகழ்ச்சி நவராத்திரி காலப் பகுதியில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது. (உ-3)

### புலிகள்

குமரன் யாழ்மாவட்டம் மலர்க்கொடி சிலம்புச் செல்வி (ஆறுமுகம் தனலட்சுமி. ஒட்டிசுட்டான்) ஆகிய போராளிகளும் தமது தரப்பில் உயிரிழந்துள்தாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். (ந-4)

# திருமலைக் கடலில் மீன் பிடிக்கச் சென்ற 7 பேரைக் காணவில்லை

(திருகோணமலை)

திருகோணமலை அலஸ் தோட்டப்பகுதியிலுள்ள அகதிகள் நலன்புரி முகாமில் இருந்து நேற்று முன்தினம் மாலை மூன்று படகுகளில் மீன் பிடிக்கச் சென்ற 7மீனவர்கள் கரை திரும்பவில்லையென அறிவிக்கப்பட்டுள்ளது.

மீனவர்களைத் தேடும் பணியில் ஈடுபட்டுள்ள ஏனைய மீனவர்கள் இவர்களைக் கண்டு பிடிக்க முடியாத நிலையில் திருகோணமலை சர்வதேச செஞ்சிலுவைச்சங்க அலுவலகத்திலும், அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிக காரியாலயத்திலும் முறையிட்டுள்ளனர். (ந- 5)

# தேர்தல் பணிகளில் ஒரு இலட்சம் அரச ஊழியரை ஈடுபடுத்த தீர்மானம்

[கொழும்பு]

எதிர்வரும் டிசம்பர் மாதம் 5 ஆம் திகதி இடம்பெறவுள்ள 12 ஆவது பொதுத் தேர்தல் தொடர்பான பணிகளில் ஒரு இலட்சம் அரச ஊழியர்களை ஈடுபடுத்துவதென தேர்தல் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பான பணிப்புரைகளை,இன்று கொழும்பில் நடைபெறவுள்ள மாவட்டத் தேர்தல் ஆணையாளர்களுக்கான கூட்டத்தில் விடுக்கவுள்ளதாக தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தெரிவித்தார்.

இதேவேளை, தபால் மூலவாக்காளர்களுக்கான விண்ணப்பங்கள் கோரல் அடுத்தவாரம் 18 ஆம் திகதி ஆரம்பமாகும் எனவும் மேலும் தெரிவித்தார். (உ-7)

# கைதான மாணாக்கர் இருவர் விடுதலை

(யாழ்ப்பாணம்)

கடந்த 11ஆம் திகதி கைது செய்யப்பட்ட அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலய மாணவர்கள் இருவர் அண்மையில் பெற்றோர் முன்னிலையில் வைத்து சுன்னாகப் பகுதி பொலிஸாரினால் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

செல்வரட்ணம் கமல்ராஜ், சிவஞானம் சிவகுமார் ஆகிய இருவருமே விடுதலை செய்யப்பட்டவராவர்.

இவர்கள் இருவரும் இராசவின் தோட்டப் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்மை தெரிந்ததே.

மேலும், இவர்களுடன் கைது செய்பப்பட்ட அதே பாடசாலை மாணவனான நடராசா அகிலகுமார் என்பவர் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுளளமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் இவர்கள் இருவரின் விடுதலைதொடர்பாக அவர்களின் உறவினர்களினால் யாழ் மனித உரிமைகள் ஆணைக் குழுவிடம் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-19,10)

இப் பத்திரிகை ""வலம்புரி"" அன் கோ ஸ்தாபனத்தாரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 15-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.